பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 16 சனிக்கிழமை 02.12.2023 கதிர் 386

## இது ரகசியம் அல்ல!

நாட்டில் அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தலும் நாடாளுமன்றத் தேர்தலும் நடக்கும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் அறிவித்திருக்கிறார். அரசமைப்பின் படியும் அடுத்த வருடத்தில் குறைந்தபட்சம் ஜனாதிபதித் தேர்தலாவது கட்டாயம் நடந்தாகவேண்டும். 2024 ஒக்டோபர் மாதத்திற்கு முன்னர் அது நடத்தப்படவேண்டும். இருந்தாலும் ரணிலை நம்ப முடியாது என்பதால், உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் போன்றே ஜனாதிபதித் தேர்தலும் ஒத்திவைக்கப்படலாமோ என்கிற அச்சமும் தொடர்ந்தும் நிலவி வருகின்றது. நாடாளுமன்றத் தேர்தலை அடுத்த ஆண்டு நடத்தவேண்டும் என்கிற கட்டாயம் இல்லை. ☞ 2

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் வந்தாறுமூலையில் மாணவன் கைது

### அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் கட்டணம்


பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டுள்ள பாடசாலைமாணவனைவிடுதலை செய்யுமாறு பல்வேறு தரப்பினரும் வலியுறுத்தியுள்ளனர். வந்தாறு மூலை மத்திய மகா வித்தியாலய மாணவனான நியூட்டன் டனுசனே இவ்வாறு பயங்கரவாதத்தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார். அவர்மீதான குற்றச்சாட்டுக்கள் என்ன என்பதை அதிகாரிகள் உடனடியாக அறிவிக்கவில்லை. அவர் தமது பாடசாலை மாணவர்தான் என்பதை மட்டக்களப்பு, வந்தாறுமூலை மத்திய மகாவித்தியாலத்தின் அதிபர் வாழைச்சேனை ☞ 2

## பிரதமர் அலுவலகத்தின் செலவு 46% குறைப்பு

பிரதமர் அலுவலகம் உட்பட 21 செலவுத் தலைப்புகளுக்கான 2024 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்ட குழு நிலை விவாதத்தில் கலந்துகொண்ட பிரதமர், தனது அலுவலகத்தின் செலவு முகாமைத்துவம் குறித்த விவரங்களை ஹன்சார்ட் அறிக்கைக்கு சமர்ப்பித்தார்.

அதன்படி, 2021ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2022ஆம் ஆண்டில் பிரதமர் அலுவலகத்தின் செலவுகள் 21 சதவீதத்தினாலும், 2023ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதமாகும் போது 46 சதவீதத்தினாலும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. ☞ 2

# ரணில் - மோடி துபாயில் நேற்று சந்தித்து பேச்சு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையில் விசேட சந்திப்பொன்று ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தில் இடம்பெற்றுள்ளது.

ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தில் துபாயில் நடைபெற்ற கோப்-28 உச்சி மாநாட்டின் ஓரத்திலேயே இந்தச் சந்திப்பு நடைபெற்றுள்ளது.

இருநாட்டு பொருளாதார விவகாரங்கள் குறித்து இரு தலைவர்களும் கலந்துரையாடியுள்ளதுடன், இலங்கையில் இந்திய அரசுகள் முன்னெடுத்துவரும் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடல்கள் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, கிரேக்க பிரதமர் கிரியாகோஸ் மிட்சோடாகிஸ் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் தொடர்பில் இதன்போது ஆராயப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாற்றம் தொடர்பான மாநாட்டில் அரச தலைவர்கள், அரச தனியார் துறைபிரதிநிதிகள், சூழலியலாளர்கள், புத்திஜீவிகள் பங்கேற்பதுடன், இந்த மாநாடு டிசெம்பர் 12 நடைபெறவுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் இந்த மாநாட்டில் உரை ☞ 8

# சுகாதார அமைச்சில் கட்டமைப்பு மாற்றம்

### அடுத்த வாரத்திலும் தொடரும் என அறிவிப்பு

சுகாதார அமைச்சில் பல கட்டமைப்பு மாற்றங்கள் செய்யப்படவேண்டும். கடந்தவாரம் சில மாற்றங்களைச் செய்தோம். அடுத்த வாரத்திலும் இதுபோன்ற சில மாற்றங்களைச் செய்ய தயாராக இருக்கிறோம் என்று சுகாதார இராஜாங்க அமைச்சர் விசேட வைத்தியர் சீதா அரம்பேபொல தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர்களுடனான சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

தற்போது, நாட்டில் உள்ள மருத்துவமனைகள் மற்றும் மருத்துவ சிகிச்சை நிலையங்களுக்குத் தேவையான தரமான மருந்துகளை நோயாளிகளுக்கு வழங்குவதில் கவனம் செலுத்தியுள்ளோம். தற்போதைய பொருளாதார நிலை காரணமாக சிகிச்சை மற்றும் பராமரிப்பு பணிகளில் சில பின்னடைவுகள் ஏற்பட்டிருந்தாலும் அவற்றைத் தவிர்த்து, அடுத்த ஆண்டில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியுதவிகளைக் கொண்டு இந்தச் செயற்பாடுகளைவெற்றிகரமாக முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளோம்.

சுகாதார அமைச்சில் பல கட்டமைப்பு மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். கடந்த வாரம் ☞ 8

# கோப் குழு தொடர்பில் நேற்று சபையில் வாதப் பிரதிவாதம்

கோப் எனப்படும்பொது முயற்சியாண்மைக்கான நாடாளுமன்ற தெரிவுக் குழு தொடர்பில் நாடாளுமன்றத்தில் வாதப்பிரதிவாதங்கள் ஏற்பட்டன.

நாடாளுமன்றத்தில் நேற்றையதினம் உரையாற்றிய மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான, அநுரகுமார திஸாநாயக்கவின் கருத்தைத் தொடர்ந்து இந்தக் கருத்து மோதல் வெடித்தது.

''வரவு,செலவுத் திட்டத்துக்கான தொடர் விவாதம் நடைபெற்றுக்கொண்டு இருக்கையில், கோப் குழு நடவடிக்கைகளும் சமாந்தரமாக முன்னெடுக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தன. குறிப்பாக பல அரச நிறுவனங்கள் வரவழைக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால், தற்போது கிரிக்கெட் விவகாரத்தினால் கோப் குழு நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் முக்கியான விடயங்கள் சம்பந்தமாக கோப் குழு நடவடிக்கைகளை ☞ 2

# தென்னக்கோனின் நியமனத்திற்கு அரசமைப்புப் பேரவை அனுமதி

பதில் பொலிஸ் மா அதிபராக சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்துதென்னகோன் நியமிக்கப்பட்டமைக்கு அரசமைப்பு பேரவை அனுமதி வழங்கியுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன உறுதிப்படுத்தினார்.

சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்துதென்னகோன், பதில் பொலிஸ் மா அதிபராக 3 மாத காலத்திற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் நியமிக்கப்பட்டார். ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக இந்த நியமனம் வழங்கப்பட்டிருந்தது.

இந்தநியமனம் அரசமைப்பு பேர ☞ 2

# போதகர் ஜெரோம் கைதாகி விளக்க மறியலில் அடைப்பு

பௌத்த மதத்தை அவமரியாதை செய்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ள போதகர் ஜெரோம்பெர்ணாண்டோ கைது செய்யப்பட்டுள்ளார். அவரை எதிர்வரும் 13ஆம்திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கோட்டைநீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றதன் அடிப்படையில் நவம்பர் 29 நாடுதிரும்பியிருந்தார் போதகர் ஜெரோம் பெர்னாண்டோ. வியாழக்கிழமை காலை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையானார். அதன்போது, அவரிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் 8 மணிநேரம் வாக்குமூலம் பதிவு செய்திருந்தனர்.

இருந்தபோதி ☞ 8

# டீசல் விலை குறைந்தாலும் பஸ் கட்டணங்கள் குறையாது

டீசல் விலை குறைக்கப்பட்டாலும் பேருந்து கட்டணங்கள் குறைக்கப்பட மாட்டாதென தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வியாழக்கிழமை நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில், எரிபொருள் விலைகளை திருத்த இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருந்தது.

இந்நிலையில், இந்த எரிபொருள் விலைத் திருத்தம் பஸ் கட்டணங்களைக் குறைப்பதற்குப் போதுமானதல்லவென தனியார் பேருந்து சங்கங்கள் தெரிவித்துள்ளன.

இதனிடையே, ஒவ்வொரு மாதமும் எரிபொருள் விலையில் ஏற்படும்மாற்றத்திற்கேற்ப முச்சக்கரவண்டி கட்டணங்களில் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது எனவும், அவ்வாறான பொறிமுறையொன்று நடைமுறையில் காணப்படவில்லை எனவும் முச்சக்கர வண்டி சாரதிகளின் தொழிற்சங்கம் குறிப்பிட்டுள்ளது.

முச்சக்கர வண்டிகளுக்கான ஒழுங்குபடுத்தலை அறிமுகப்படுத்தி, முறையான கட்டணபொறிமுறையின் கீழ்கட்டணதிருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று அச்சங்கம் கோரியுள்ளது.

இதேவேளை, ☞ 8

# 5 ஆயிரம் ஓ.எல். மாணவருக்கு இம் முறையும் புலமைப் பரிசில்

### ஜனாதிபதி செயலகம் நடவடிக்கை

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்து உயர்தரம் கற்க தகுதிபெற்றுள்ள மாணவர்களுக்கு கடந்த வருடத்தைப் போன்று, இந்தவருடமும் ஜனாதிபதி நிதியத்தின் புலமைப்பரிசில்வழங்கும் வேலைத்திட்டத்தை ஆரம்பிக்குமாறு ஜனாதிபதிரணில்விக்ரமசிங்க அறிவுறுத்தியுள்ளார்.

அதற்கமைய ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவின் வழிகாட்டலில் மேற்படி புலமைப்பரிசில் திட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

அதன்படிநாட்டிலுள்ள 100கல்விவலயங்களும் உள்ளடங்கும் வகையில் ஒரு கல்வி வலயத்தில் இருந்து 50 மாணவர்கள்வீதம் ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

இருந்தாலும்ஜனாதிபதிவிரும்பினால் நடத்தலாம். எல்லாம்வரும்ஆனால் வராது என்கிற நிலையில்தான் தொடர்கின்றது.

நாட்டு நிலை மட்டுமல்ல வீட்-டு நிலையும் அதுதான். வீடு என்றால், தமிழ் அரசுக் கட்சியின் நிலையும் அதுதான் என்று சொல்கின்றேன். அடுத்தவருடம்ஜனவரியில்கட்சியின் பொதுக் குழுக் கூட்டத்தைக் கூட்டி புதியதலைவர்உட்படநிர்வாகத்தைத் தெரிவுசெய்வதுஎன்றுகடந்தமாதம் வவுனியாவில் நடந்த கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. அதற்கு முன்னதாக நடத்தி முடிக்கப்படவேண்டிய தொகுதிக் கிளைத் தேர்தல்களை நடத்தி முடிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

தமிழ் அரசுக் கட்சியின் பொதுக் குழு 4 வருடங்களுக்கும் மேலாக, அதாவது 2019 பொதுத் தேர்தலில் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா தோல்வியுற்றதன் பின்னர்கூட்டப்படவில்லை. மாவை தேர்தலில் தோற்றது முதலே கட்சிக்குப் புதிய தலைவர் ஒருவர் தெரிவுசெய்யப்படவேண்டும்என்கிற குரல்கள்வலுக்கத்தொடங்கிவிட்டன. உண்மையில் தேர்தலில் தோற்றதுமே தலைமைப் பதவியில் இருந்து விலகி புதியவர்களுக்கு வழி விட்டிருந்தால் மாவையர் மதிப்போடும் செல்வாக்கோடும் கட்சிக்குள் இருந்திருப்பார். ஆனால், இப்போது அவரைத் தூக்கி வெளியே எறியும் நிலைக்கு கட்சி வந்திருக்கிறது. பலவந்தமாக அவரை அகற்றும் முயற்சி என்கிற அளவுக்கு இன்றைய நிலமை வந்து நிற்கின்றது.

அதனாலேயே, அறிவிக்கப்பட்டபடி பொதுக்குழுக்கூட்டம் இடம்பெறுமா என்கிற கேள்வி தொடர்ந்தும் தொக்கி நிற்கின்றது. அப்படி அறிவிக்கப்பட்டபடி பொதுக் குழுக் கூட்டம் நடந்தால், இம்முறை தலைவர் பதவிக்குக் குறைந்தபட்சம் இருவர் போட்டியிடுவார்கள் என்பது உறுதியாகி உள்ளது. மன்னாரில் நேற்று நடந்த செய்தியாளர்கள் சந்திப்பில்நாடாளுமன்றஉறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்உறுதிப்படுத்தினார்.

போட்டியிட உள்ள இருவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள். எம்.ஏ.சுமந்திரன் மற்றும் சிவஞானம் சிறீதரன் ஆகியோரே போட்டியில் களமிறங்கியுள்ளனர்.

இவர்கள் தலைமைப்பதவிக்காக போட்டியிடுவதற்கான வேட்புமனுக்கள் கட்சியின் தற்காலிக செயலாளர் வைத்தியர் சத்தியலிங்கத்திடம்கையளிக்கப்பட்டுள்ளன.

சுமந்திரனை தலைவருக்கான வேட்பாளராக முன்மொழிந்து, சி.வி.கே.சிவஞானம், சொலமன் சிறில், குலநாயகம், குமரகுருசாமி, பரஞ்சோதி, ஜேம்ஸ், இரத்தனவடிவேல், உள்ளிட்ட 12 பேர் கையொப்பமிட்டுள்ளனர்.

இதேநேரம், சிறிதரனை தலைவருக்கான வேட்பாளராக முன்மொழிந்து குருகுலராஜா, வேழமாலிகிதன், விஜகுமார், உள்ளிட்ட அறுவர் கையொப்பமிட்டுள்ளனர்.

நவம்பர் 5 வவுனியாவில் நடைபெற்ற இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் 2024 ஜனவரி 21 மற்றும் 28 ஆகிய இரு தினங்களில் பொதுக் குழுவை திருகோணமலையில் கூட்டுவது என்று எடுக்கப்பட்ட முடிவின்படி கூட்டம் நடந்தால் இவர்கள் போட்டியிடுவார்கள்.

அதற்கு முன்னதாக, ஜனவரி 20 கூடும் கட்சியின் மத்திய செயற்குழு புதிய தலைமையை ஏகமனதாக தெரிவு செய்வதற்கு முயற்சிக்கும். போட்டியில்வெற்றிவாய்ப்புக்குறைவு என்று கருதும் போட்டியாளர்கள் விலகிக்கொண்டால் ஒருவர் ஏகமனதாகத் தலைவராகும் வாய்ப்பு ஏற்படும். அப்படியில்லை என்றால் வாக்கெடுப்புநடத்தப்பட்டுத் தலைவர் தெரிந்தெடுக்கப்படுவார். இதுவரை காலமும் தமிழ் அரசுக் கட்சியின் நிர்வாகிகள் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்கள் என்ற பாரம்பரியத்தைக்காட்டிஅதனையே தொடர்வதற்கு ஒரு தரப்பினர் விரும்புகின்றனர். ஆனால், போட்டி என்பது ஆரோக்கியமான ஜனநாயகம் என்று கருதும் புதிய தலைமுறையினர் மல்லுக்கட்டுவதற்குத் தயாராக நிற்கின்றனர்.

எனவே ஜனவரி 20 செயற்குழுக் கூட்டத்தில் தலைவர் ஏகமனதாக முடிவு செய்யப்பட்டால் அவர் ஜனவரி 21 நடக்கும் பொதுக் கூட்டத்தில் முறைப்படி தெரிவு செய்யப்பட்டு நிர்வாகக் குழுவுடன் பதவியேற்பார். அதன் பின்னர் ஜனவரி 28 பொதுக் குழுக் கூட்டத்தைமீண்டும்கூட்டிகட்சியின் கொள்கைத் தீர்மானங்களை அறிவிப்பார். ஏகமனதான தெரிவு இல்லையெனில், ஜனவரி 21 வாக்கெடுப்பு நடத்தப்பட்டு புதிய தலைவர் தெரிவு செய்யப்படுவார். அதன் பின்னர் ஜனவரி 28 அவர் தனது கொள்கை உரையையும் தீர்மானங்களையும் ஜனவரி 28 அறிவிப்பார்.

ஒருவேளை ஜனவரியில் தமிழ் அரசுக் கட்சித் தேர்தல் நடந்து முடிந்தால், ஜனாதிபதித் தேர்தலும்கூட நடக்கும் என்று கருதிக் கொள்ளலாமோ என்னவோ....

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## பயங்கரவாதத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரிக்கு அனுப்பிவைத்துள்ள எழுத்து மூலமான கடித்தில் உறுதிப்படுத்தியுள்ளார்.நியூட்டன்னுசன்என்ற மாணவன் எமது வித்தியாலயத்தில் தரம் 13இல் தொழில்நுட்பப் பிரிவில் கல்வி கற்கின்றார். அவர் இவ்வருடம் நடைபெறவிருக்கும் க.பொ.த.(உயர்தர) பரீட்சைக்கு தோற்றுபவர் என்பதோடு பாடசாலையில் மாணவத் தலைவராகவும் செயற்படுபவர் என்பதை உறுதிப்படுத்துகின்றேன் அதிபர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

மாணவனை விடுதலை செய்யுமாறு அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது. மாணவனின் கைது மற்றும் பயங்கரவாத தடைச்சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதை எதிர்த்து நடக்கும் அமைதியான போராட்டங்களில்ஈடுபடுபவர்களைக் கைதுசெய்தல் மற்றும் சிறைகளில் கைதிகளை நடத்துவது உட்பட பயங்கரவாத தடைச் சட்டத்தை தொடர்ந்துபயன்படுத்துவதுகுறித்துக் கேள்விப்படுபவைஎல்லாம்கவலை அளிக்கிறதென இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சுங் தெரிவித்துள்ளார்.

அத்துடன், பொலிஸ் தடுப்புக் காவலில் இருப்பவர்களின் கருத்துச் சுதந்திரம் மற்றும் அவர்கள் மனிதாபிமானத்துடன் நடத்தப்படுவதை உறுதி செய்வது ஆகியன இன்றியமையாதன என்றும் அவர் தெரிவித்துள்ளார். குறிப்பாக அரசு அதன் சர்வதேச கடமைகளுக்கு இணங்க பயங்கரவாத தடை சட்டத்தை மாற்றியமைத்து முக்கிய சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்த விரும்புவதால், அது அடிப்படை சுதந்திரங்களை பாதுகாக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுகள் இடம்பெறுவது குறித்து இலங்கைக்கான பிரிட்டனின் உயர்ஸ்தானிகர் அன்றூ பற்றிக்கும் கரிசனை வெளியிட்டுள்ளார்

அவர் தனது டுவிட்டர் பக்கத்தில், பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழான கைதுகள் குறித்து கரிசனை கொண்டுள்ளேன் பயங்கரவாததடைச்சட்டத்தைபயன்படுத்துவதை நிறுத்துவதாகவும் மனித உரிமைகளை மதிக்கும் புதிய சட்டத்தினைகொண்டுவருவதாகவும் இலங்கை அதிகாரிகள் வழங்கிய வாக்குறுதிகளில் உறுதியாக இருக்கவேண்டும் என கேட்டுக் கொள்கின்றேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் அண்மையில் தனிநபர்கள்கைதுசெய்யப்பட்டுள்ளமை, மனித உரிமைக் கடமைகளை மீறுவதாகவும் நீக்கப்படவேண்டிய சட்டத்தைப் பயன்படுத்துவது தொடர்பில்அரசினால்வழங்கப்பட்ட உறுதிமொழிகளுக்கு எதிரானது என்பதைக் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையானது சுட்டிக்காட்டியிருப்பதைக் குறிப்பிடுவதோடு, அதனையிட்டு நாங்கள் கவலையடைகிறோம் என்றும் பிரிட்டிஷ் தூதுவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுவது குறித்து ஐரோப்பிய ஒன்றியமும்கவலைவெளியிட்டுள்ளது.அளிக்கப்பட்ட வாக்குறுதிகளின் படி சர்வதேச தராதரங்களிற்கு ஏற்ப அதிகாரிகள் பயங்கரவாத தடைச்சட்டத்தினை மாற்ற வேண்டும், அதுவரை பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்துவதை நிறுத்தவேண்டும் என இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் குழு தெரிவித்துள்ளது.

கடந்தஒருவாரகாலத்திற்குள்9பேர் பயங்கரவாதத்தடைச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள்என்று தமக்குத் தகவல் கிடத்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். இதேவேளை, மட்டக்களப்பில் மட்டுமே பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ்பெண், அரசியல்வாதி, மாணவன் உட்படப் 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணாக்கியன் தெரிவித்தார்.

## பிரதமர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2021ஆம் ஆண்டில் 1661.7 மில்லியன் ரூபாவாக இருந்த செலவுகள், 2022ஆம் ஆண்டில் 1310.4மில்லியனாகவும், 2023ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதமாகும் போது ரூ. 705.7 மில்லியனாகவும் குறைக்கப்பட்டுள்ளன.

2021ஆ-ம் ஆண்டு பிரதமர் அலுவலகத்திற்கு வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட 1661.7 மில்லியன் ரூபாவும் செலவிடப்பட்டிருந்தது. 2022இல் ஒதுக்கப்பட்ட 1432.8 மில்லியன் ரூபாவில் 1310.4 மில்லியன் ரூபா மட்டுமேசெலவுசெய்யப்பட்டிருந்தது. 2023இல் ஒதுக்கப்பட்ட 1012.0 மில்லியன் ரூபாவில் 705.7 மட்டுமே செலவிடப்பட்டிருக்கிறது.

தினேஷ் குணவர்தன பிரதமர் பதவியை ஏற்கும் முன்னர், 2021, -2022 ஆம்ஆண்டுகாலப்பகுதியில் பிரதமர் அலுவலக ஊழியர்களின் எண்ணிக்கை 500க்கும் மேற்பட்டதாக இருந்துள்ளது. தற்போது அந்த எண்ணிக்கை 285 ஆக குறைக்கப்பட்டுள்ளது.

அதன்படி, 2022இல் சம்பளச் செலவுகள் 340.3 ரூபாவாக இருந்ததுடன், 2023.11.22 ஆந்திகதியாகும் போது, அந்த செலவு 208.2 மில்லியன் ரூபாவாக 39 சதவீதம் குறைக்கப்பட்டுள்ளது, மேலும் இலத்திரனியல் முறைமைகள் மூலம் அலுவலக பணிகள் மேற்கொள்ளப்படுவதால் காகிதாதிகளின் செலவு 74சதவீதம் குறைக்கப்பட்டுள்ளது.

பிரதமர் அலுவலகத்திற்கு கிடைக்கப்பெறும் கடிதங்களுக்கு பதில்அனுப்பும்முறையைடிஜிட்டல் மயமாக்கியதால், தபால் மற்றும் தொடர்பாடல் செலவுகளை 36 சதவீதம் குறைக்க முடிந்துள்ளது.

2022 ஆம் ஆண்டில், பிரதமர் அலுவலகத்தில் 178 வாகனங்கள் இருந்தபோதும், 2023 ஆம் ஆண்டின் இறுதிக்குள், சேவைத் தேவைகளுக்குப் போதுமான 125 வாகனங்கள் மட்டுமே உள்ளன. அதன்படி, 2022 ஆண்டு 239.2 மில்லியன்ரூபாவாகஇருந்தவாகன பராமரிப்பு செலவு 2023இல் 70 சதவீதம் குறைக்கப்பட்டு 72.3 மில்லியனாக்கப்பட்டுள்ளது.

எரிபொருளின் செலவு 26% குறைந்துள்ளமையானது, 2022 ஆம் ஆண்டில் 107 மில்லியன் ரூபாவாகஇருந்தநிலையில்இருந்து 2023இல் 79.3 மில்லியன் ரூபாவாக குறைக்க முடிந்தமையினாலாகும்.

இலங்கை மின்சார சபையுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் கீழ் பராமரிக்கப்பட்டு வந்த மின்பிழப்பாக்கிகளின் வருடாந்த பராமரிப்பு நடவடிக்கையை முகவர் நிறுவனங்களிடம் ஒப்படைத்ததன் மூலம் பிரதமர் அலுவலகம்15மில்லியன்ரூபாவை மீதப்படுத்தியதுடன், இயந்திரங்கள் மற்றும்இயந்திரங்களின்பராமரிப்புச் செலவு31சதவீதம் குறைக்கப்பட்டது.

இவ்வாறு வினைத்திறனாக நிதி முகாமைத்துவத்தைப் பேணுகின்ற அதேவேளையில், நாட்டின் பொருளாதார மற்றும் சமூக நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு, மேலும்பலஅவசர சந்தர்ப்பங்களை உள்ளடக்கிய வகையில் பிரதமர் அலுவலகத்தின் பொறுப்புகளின் நோக்கெல்லை மேலும் விரிவுபடுத்தப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பிரதமர் அலுவலகத்திற்கு அமைச்சரவையினால் ஒதுக்கப்பட்டுள்ள மேலதிக பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கும், அலுவலகத்தின் சேவைகளை தடையின்றி பேணுவதற்கும், செலவுகளை மட்டுப்படுத்தியமை ஒரு தடையாக அமையவில்லை.

262 பெரும் திட்டங்கள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தேசிய செயற்பாட்டு மையத்தினை வாராந்தம் நடைமுறைப்படுத்தியமை, தேசிய நீர்வளக் கொள்கையைத் தயாரித்தல், தேசிய டிஜிட்டல் கொள்கையைத்தயாரித்தல், தேசிய சக்திவளகொள்கையைதயாரித்தல், மற்றும் கல்வி மூலோபாயங்கள் மற்றும் கொள்கை சட்டகத்தைத் தயாரித்தல் ஆகிய மேலதிக பணிகளும்பிரதமர்அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது என்றும் நாடாளுமன்ற அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## கோப் குழு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுக்க முடியாதுள்ளது.

இந்த நிலைமைகளைப் பார்க்கின்றபோது, கோப் குழு அமர்வுகளை நடத்திவிடக்கூடாது என்ற அடிப்படையில் தலைமைப் பதவி உள்ளிட்ட விவகாரம் கிளப்பிவிடப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதா என்ற சந்தேகம் எமக்குள்ளது. கோப்குழுவின் தலைவர் முறையாக செயற்படாமைக்கு எதிராக கோப்குழு செயற்பட வேண்டாமா?" என்றார்.

இதனையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர, "கோப்குழுவின் தலைவர் வாயில் கைவைத்து அனைத்தையும் மூடி மறைத்துவிட முடியும் என்றால் கோப்குழுவின் எதிர்காலம் எவ்வாறு அமையும் என்ற கேள்வி எழுகின்றது. டிசெம்பர் 13 இந்த நாடாளுமன்றத்தின் கூட்டத்தொடர் நிறைவடையும். மீண்டும் புதிய அமர்வினை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்தால் அனைத்துக்குழுக்களினது பதவிநிலைகளும் நிறைவுக்கு வரும்" என்றார்.

தொடர்ந்து சாபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன, ''கோப்குழுவிற்குத் தலைவர் ஒருவரை நியமிப்பது தொடர்பில் அதன் உறுப்பினர்களால் தீர்மானம் எடுக்க முடியும். அவர்கள் ஒன்றிணைந்து தீர்மானத்தினை எடுக்கவேண்டும். கோப் குழுவை அழைத்து இன்று (நேற்று) அல்லது நாளை (இன்று) இந்தப் பிரச்சினையை தீர்க்க முடியும்'' என்றார்.

இதனையடுத்து எழுந்த எதிர்க்கட்சியின் பிரதம கொரடாவும், நாடாளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கிரியெல்ல, "நிலையியற் கட்டளையின் பிரகாரம் கோப்குழுவிற்கு இரண்டு தலைவர்களை நியமிக்க முடியாது. கிரிக்கெட்டுக்காக ஒருதலைவரையும்பிற விடயங் களுக்கு ஒரு தலைவரையும் நியமிக்க முடியாது" என்றார்.

அதன்போது, தற்காலிக தலைவர் ஒருவரை நியமிப்பதற்கான அதிகாரம் உறுப்பினர்களுக்கு உள்ளதாக சபாநாயகர் குறிப்பிட்டார். எனினும், அநுரகுமார திஸாநாயக்க, ''தற்போது கோப் குழுவின் தலைமைப்பதவி வெற்றிடமாகவில்லை. அதே போன்று பேராசிரியர். ரஞ்சித்தை தொடர்ந்து தலைமைப் பதவியில் வைத்துக்கொள்வதாக உறுப்பினர்கள்தீர்மானித்தால்என்ன நடைபெறும். அதன்காரணமாகவே சபாநாயகராகிய நீங்கள் இதில் தலையிடவேண்டியுள்ளது. உங்கள் தலைமையில் அல்லது செயலாளரின் தலைமையில் கோப் குழுவைக் கூட்டுங்கள். அதன் பின்னர் என்ன செய்வது என்று தீர்மானம் எடுக்க முடியும்'' என்றார்.

## தென்னக்கோனின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைக்குஅனுப்பிவைக்கப்பட்டிருந்த நிலையில், அதற்கு அரசமைப்பு பேரவைஅனுமதிவழங்கியுள்ளதாக சபா நாயகர் குறிப்பிட்டார்.




காலைக்கதிர் Kalaikkathir

# நட்டத்தில் இயங்கும் வன்னி டிப்போக்களை சீரமைக்குக

## ரிஷாத் வேண்டுகோள்

இலாபத்தில் இயங்கிய மன்னார், வவுனியா, முல்லைத்தீவு பஸ் டிபோக்கள் தற்பொழுது நஷ்டத்தில் இயங்குவதற்கான உரிய காரணத்தைக் கண்டறியுமாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாடாளுமன்றில் உரையாற்றிய அவர் மேலும் கூறியவை வருமாறு -

'வன்னி மாவட்டத்தில் இலங்கை போக்குவரத்துச் சபை மிக மோசமான நிலையில் உள்ளது. மக்களுக்கான பணிகளை மேற்கொள்வதற்கு தேவையான வசதிகள் இல்லையென்று டிப்போ நிர்வாகிகள் கூறுகின்றனர். நாம் அதிகாரத்தில் இருந்தபோது ஓரளவு இந்தப் பிரச்சினைக்கு தீர்வு கண்டோம். எனவே, டிப்போவில் நிலவும் ஆளணிப் பிரச்சினைக்கு உரிய தீர்வைக் கண்டு, முறையான சேவையை வழங்குமாறும், அதில் கவனம் செலுத்துமாறும் போக்குவரத்து அமைச்சரிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு கீழ்வரும் மன்னார் - புத்தளம் பாதை சுமார் நூறு வருடத்துக்கு மேலாக பழைமை வாய்ந்தது மட்டுமின்றி, வர்த்தமானியிலும் பிரகடனம் செய்யப்பட்ட வீதி அது. 2009இல் யுத்தம் முடிவடைந்த பின்னர் இந்தப் பாதை திறந்துவைக்கப்பட்டது. யாழ்ப்பாணத்திலிருந்து இந்தப் பாதையின் மூலம் கொழும்புக்கு வருவதானால் சுமார் நூறு கிலோமீற்றர் குறைவாகும். எனவே, போகவும் வரவும் 200 கிலோமீற்றரை மிச்சப்படுத்தலாம்.

இது பொருளாதார ரீதியிலும் நமக்குப் பயன்தரும். கடந்த காலத்தில் இந்தப் பாதைக்கு கார்பட் இடும்போது சில சக்திகளால் தடுத்து நிறுத்தப்பட்டது. அரச சார்பற்ற நிறுவனமொன்றால் பிறசக்திகளின் உதவியுடன் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதால் பாதை மூடப்பட்டது. குறித்த பாதையில் இன்னும் முப்பது கிலோமீற்றரே கார்பட் இடப்பட வேண்டும்.

பாதையை மூடுமாறு அவர்கள் வழக்குத் தாக்கல் செய்யவில்லை, புனரமைக்க வேண்டாமென்றே அவர்கள் வழக்குத் தாக்கல் செய்தனர். எனவே, நான்கு வருடமாக மூடப்பட்டிருக்கும் இந்தப் பாதையை அவசரமாக திறந்துவிட உதவுங்கள். இதற்காக, சட்டமா அதிபர் திணைக்களம், வனவிலங்கு திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகார சபை முக்கியஸ்தர்களை ஒரே மேசையில் அழைத்து, பேச்சு நடத்தி நடவடிக்கை எடுங்கள்.

நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் மன்னார், சிலாவத்துறையில் பலநோக்கு மண்டபம் ஒன்றை முன்னர் அமைக்கத் தொடங்கினர். அரைவாசி கட்டட வேலைகளின் பின்னர் அது நிறுத்தப்பட்டு, நான்கு வருடமாக கட்டடப் பணிகள் நடைபெறவில்லை. அதேபோன்று, பள்ளிமுனை விளையாட்டரங்கு அரைவாசி கட்டட வேலைகளுடன் நிறுத்தப்பட்டுள்ளது. இதற்குப் பொறுப்பான அமைச்சர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.



சஜித் பிரேமதாச அமைச்சராக இருந்தபோது, வடக்கு, கிழக்கில் சில வீடமைப்பு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஆட்சி மாற்றத்தின் பின்னர் அவைகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ளன. இவற்றுக்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன். மன்னார் நகர 02 ஆவது திட்ட செயற்பாட்டை ஆரம்பியுங்கள். அத்துடன், முல்லைத்தீவில் பஸ் தரிப்பிடம் ஒன்றை சிறப்பான முறையில் அமைத்து தருமாறு வேண்டுகின்றேன்.

சவூதி அரேபியாவின் உதவியுடன் அமைக்கப்பட்ட அம்பாறை, நுரைச்சோலை வீட்டுத்திட்டம் இன்னும் மக்களுக்கு கையளிக்கப்படாமல் தொடர்ந்தும் பிற்போடப்பட்டுள்ளது. இங்கு அமைக்கப்பட்ட 500 வீடுகள் மற்றும் அடிப்படை வசதிகளுக்காக அமைக்கப்பட்ட கட்டடங்கள் யாவும் உருக்குலைந்துவிட்டன. எனவே, இவற்றை விரைவில் புனரமைத்து மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுங்கள். - என்றார். (05)

# அடுத்த மாதம் முதல் தடையின்றி திரிபோஷா மா விநியோகம்

## சுகாதாரத்துறை அமைச்சர் உத்தரவாதம்



சுகாதாரத் துறையில் காணப்படும் அடிப்படை பிரச்சினைகளை 2023 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் சுகாதார அமைச்சின் குழு நிலை விவாதத்தில் சுட்டிக் காட்டினேன்.

அதே பிரச்சினைகளை வியாழக்கிழமையும் சுட்டிக்காட்டுகிறேன். திரிபோஷா விநியோகம் இடைநிறுத்தப்பட்டுள்ளதையிட்டு கவலையடைய வேண்டும்.

திரிபோஷா பிரச்சினைக்காவது உடனடியாக தீர்வு காணுங்கள் என தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூரிய சுகாதாரத்துறை அமைச்சரிடம் வலியுறுத்தினார்.

திரிபோஷா விநியோகத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அடுத்த மாதம் முதல் தடையில்லாமல் திரிபோஷா விநியோகிக்கப்படும் என சுகாதாரத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரன பதிலளித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் சுகாதார அமைச்சுக்கான செலவீனத் தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றிய தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூரிய -

பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் நாட்டின் சுகாதாரத்துறை மிக மோசமான நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளது.

சுகாதாரக் கட்டமைப்புடன் தொடர்புடைய நிறுவனங்களின் முறைகேடான செயற்பாடுகளால் இலவச சுகாதாரத் துறை மீதான மக்களின் நம்பிக்கை வெகுவாகச் சிதைவடைந்துள்ளது.

சுகாதாரத்துறையின் நிதி மோசடியுடன் தொடர்புடையவர்களுக்கு பார பட்சமின்றிய வகையில் தண்டனை வழங்க வேண்டும் அப்போதுதான் இலவச சுகாதார துறை மீது மக்கள் நம்பிக்கை கொள்வார்கள். எதிர்காலத்திலும் முறைகேடான செயற்பாடுகள் இடம்பெறா.

சுகாதாரத் துறையில் தற்போது நிலவும் அடிப்படை பிரச்சினைகளை 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் சுகாதார அமைச்சின் மீதான குழுநிலை விவாதத்தின் போது சுட்டிக்காட்டினேன்.

ஆனால் எப்பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைக்கவில்லை. புதிய சுகாதாரத்துறை அமைச்சரின் நிர்வாகத்தின் கீழ் தீர்வு கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன்.

பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறுகிறார்கள். இந்தப் பிரச்சினைகளுக்கு உடனடியான தீர்வு காண வேண்டும்.

கடந்த அரசாங்கம் எடுத்த தவறான தீர்மானங்களால் திரிபோஷா விநியோகம் நெருக்கடிக்குள்ளாக்கப்பட்டுள்ளது. 3 வயதுக்கு குறைந்த பிள்ளைகளுக்கு திரிபோஷா வழங்கல் இடைநிறுத்தப்பட்டுள்ளமை கவலைக்குரியது. ஆகவே, திரிபோஷா விநியோகம் மீண்டும் சிறந்த முறையில் முன்னெடுக்கப்பட வேண்டும். - என்றார்.

இதற்கு எழுந்து பதிலளித்த சுகாதாரத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரன, சுகாதாரத்துறையில் உள்ள பிரச்சினைகளுக்கு கட்டம் கட்டமாக தீர்வு காண்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. திரிபோஷா விநியோகத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அடுத்த மாதம் முதல் திரிபோஷா விநியோகம் தடையின்றி முன்னெடுக்கப்படும். - என்றார்.(05)

# பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் கேக் விற்றவர் கூடக் கைதானார்

## கோவிந்தன் கருணாகரம் வேதனை

மட்டக்களப்பில் வெதுப்பகத்தில் (பேக்கரி) "கேக்" விற்பனை செய்த இளைஞனை மாவீரர் தினத்தை காரணம் காட்டி பொலிஸார் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்துள்ளனர். இவ்வாறான நிலை தொடருமாயின் இந்த நாடு அழிந்து போகும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் சபையில் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் சுகாதார அமைச்சுக்கான செலவீனத் தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

மட்டக்களப்பில் கடந்த வாரம் 10 இற்கும் மேற்பட்டவர்கள் பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். எனக்கு தெரிந்த இளைஞன் ஒருவர் மட்டக்களப்பில் உள்ள பேக்கரியில் வேலை செய்கின்றார். அவர் கடந்த வாரம் கேக் ஒன்றை விற்றுள்ளார்.



அந்த கேக்கை வாங்கிச் சென்றவர் கேக்கில் வேலுப்பிள்ளை பிரபாகரன் என பெயர் எழுதியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக பொலிஸார், குறிப்பிட்ட பேக்கரிக்கு சென்று சி.சி.டிவி கமராவை ஆராய்ந்துள்ளனர். அதில் அந்த இளைஞன் கேக்கை மாத்திரம்தான் கொடுத்துள்ளார். அதில் வேலுப்பிள்ளை பிரபாகரன் என எழுதிக்கொடுக்கவில்லை. ஆனால் அந்த இளைஞனை பயங்கரவாதத்தடை சட்டத்தின் கீழ் பொலிஸார் கைது செய்துள்ளனர். இந்த நிலை தொடருமாயின் இப்படியே இந்த நாடு அழிந்து போகும். - என்றார். (05)

# யாழ். பஸ் நிலையத்தில் கிளி. இளைஞன் கைது

## கஞ்சா வைத்திருந்தாரென குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தில் கேரள கஞ்சா வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் இளைஞரொருவர் வியாழக்கிழமை விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டார்.

கிளிநொச்சி கோணாவில் பகுதியைச் சேர்ந்த 23 வயதான இளைஞரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டார். சந்தேகநபரும் மீட்கப்பட்ட ஒரு கிலோ 480 கிராம் கேரள கஞ்சாவும் யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் விசேட அதிரடிப் படையினரால் கையளிக்கப்பட்டன.

சந்தேகநபரை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்த யாழ்ப்பாணம் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# கல்முனை சீர்திருத்த பாடசாலையில் மர்மமான முறையில் சிறுவன் இறப்பு

## சந்தேகம் வெளியிடும் பெற்றோர்

மட்டக்களப்பு கொக்குவில் பகுதியை சேர்ந்த ஆனந்ததீபன் தர்சாந் எனும் 15 வயது மதிக்கத்தக்க சிறுவன் ஒருவன் கல்முனை சீர்திருத்த பாடசாலையில் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார் என சிறுவனின் தந்தை தெரிவித்துள்ளார்.

கடந்த நவம்பர் 17ஆம் திகதி மணியொன்றை திருடிய குற்றச்சாட்டின் பேரில் கொக்குவில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இந்த சிறுவன், நீதிமன்ற உத்தரவின் பிரகாரம், அன்றைய தினமே கல்முனை சீர்திருத்த பாடசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இந்தச் சிறுவன் கடந்த புதன் கிழமை (நவ. 29) அதிகாலை 3.30 மணிளவில் உயிரிழந்துவிட்டார் என சிறுவனின் குடும்பத்தாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, தனது மகனின் மரணத்தில் சந்தேகம் இருப்பதாகவும் மகன் காயங்களுடன் உயிரிழந்துள்ளதாகவும் சிறுவனின் தந்தை தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், சிறுவனின் சடலம் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் சிறுவனது மரணம் தொடர்பான விசாரணை அறிக்கையையும் சட்ட வைத்திய அறிக்கையையும் தங்களுக்கு வழங்க வேண்டும் என்றும் தனது மகனின் மரணத்தில் பல விதமான பொய் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன எனவும் சிறுவனின் தந்தை மேலும் தெரிவித்துள்ளார்.

மிகவும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் சிறுவனின் குடும்பத்தினர், தங்களது பிள்ளைக்கு ஏற்பட்ட நிலை வேறு யாருக்கும் நேரிடக்கூடாது என்றும் தங்களது பிள்ளையின் மரணத்தில் ஒரு நீதியான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளனர்.

(05)

காலைக்கதிர்
Kalaikkathir

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தால் மீண்டும் தமிழர்களுக்கே பாதிப்பு

இலங்கைக் காவல்துறையினரின் பக்கச்சார்பான இனவாத நடவடிக்கைகள் தங்கு தடையின்றித் தொடர்கின்றன என்பதை கடந்து சென்ற மாவீரர் நாள் நிகழ்வுகள் நன்கு உணர்த்தியுள்ளன. இந்த நிகழ்வுகளையொட்டிய மாணவன் உட்பட குறைந்தது 9 தமிழர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது. இவற்றில்பெரும்பாலான கைதுகள் கிழக்கில் நிகழ்ந்துள்ளன.

மட்டக்களப்பு மாவட்டம், மயிலத்தமடுவில் அத்துமீறிக் குடியேறிய சிங்களவர்களை வெளியேற்றுவதற்குப் பொதுத் தொல்லைகள் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்குமாறு அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அறிவுறுத்தியபோதும்கூட எந்தவித நடவடிக்கையையும் எடுக்காதகாவல்துறையினர், மாவீரர்நாள்நிகழ்வுகளோடு தொடர்புபட்டவர்களை மட்டும் அவசர அவசரமாக எவரது உத்தரவுமின்றிக் கைது செய்து பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கின்றனர்.

1950கள் முதல் தொடரும் காவல்துறையினரின் இத்தகைய பாரபட்சமான இனவாத அணுகுமுறையே தமிழ் இளைஞர்கள் ஆயுதங்களை ஏந்தி வன்முறையை நாடியதற்கான முக்கிய காரணம் என்பதை மறுத்துவிடமுடியாது. புதிய இலங்கையைப் பற்றிப் பேசும் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் காலத்திலும்அந்தஅணுகுமுறையில்எந்தவிதமாற்றமும் இல்லை என்பதும், மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான காத்திரமான எந்த முயற்சியிலும் ரணில் ஈடுபடவில்லை என்பதும் இந்த நாட்டின் சாபக்கேடு.

இப்படி காவல்துறை அதிகாரிகளால் மோசமான, இனவாத நோக்கத்தோடு பயன்படுத்தப்பட்டு வருவதாலேயே பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கவேண்டும் என்று தமிழர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். அதைச் செய்வார் என்று 2015இல் ஆட்சி அதிகாரத்திற்கு வந்தபோதும் உறுதியளித்த ரணில் விக்கிரமசிங்க அப்போதும் செய்யவில்லை, இப்போதும் செய்யவில்லை. 2015இல் நடந்துகொண்டது போலவே பயங்கரவாதத் தடைச் சட்டத்தைவிட மோசமான மற்றொரு சட்டத்துக்கான வரைவைக் கொண்டு வந்து அச்சுறுத்துவதன் மூலம் பயங்கரவாதத் தடைச் சட்டம் அவரால் தொடர்ந்தும் பேணப்படுகின்றது.

இப்போது அவரது அரசியல் எதிரிகளை, முக்கியமாக மக்கள் கிளர்ச்சியைத் தூண்டக்கூடியவர்களை அடக்கி ஒடுக்குவதற்கு இந்தச் சட்டம் அவசியமாக இருப்பதன் காரணமாக அதனைத் தொடர்ந்தும் பேணிக் காப்பதில் அவர் அக்கறையாக இருக்கின்றார். இருப்பினும் அதனால் அதிகம் பாதிக்கப்படுபவர்களாகத் தமிழர்களே இருக்கின்றார்கள் என்பது மீண்டும் ஒரு தடவை நிரூபிக்கப்பட்டிருக்கின்றது.

தெற்கில் உள்ள தமிழர்கள் அனைவரையும் கொல்வேன் என்று பகிரங்கமாக மிரட்டும் பிக்குவிற்கு எதிராக விசாரணைகளைக்கூட முன்னெடுக்காது, நீதிமன்றில் முன் பிணை வாங்கி வந்த போதகர் ஜெரோம் பெர்னான்டோவைக் கைது செய்து தமது இனவாதப் பக்கச்சார்பைநிரூபிக்கும்காவல்துறையினரிடம்இருந்து இதைவிட மேலான, சிறப்பான நடவடிக்கைகளை எதிர்பார்ப்பதுதான் அபத்தமானது. ஆட்சியாளர்களும் அதனைக் கேள்விக்குட்படுத்தாமல் தமது சுயநலம் கருதி ஆதரிக்கும்போது காவல்துறையினரின் இத்தகைய மோசமான செயற்பாடுகள் குறைவதற்குப் பதில் அதிகரிக்கவே செய்யும்.

அதன் விளைவாகவே வந்தாறுமூலையில் தற்போது மாணவன் ஒருவனும் கைது செய்யப்பட்டிருக்கின்றான். அதுவும் இந்த ஆண்டு கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்ற இருக்கும் மாணவன் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளான். இனி அவனது எதிர்காலம் முற்றிலும் கேள்விக்குறியாக்கப்பட்டுவிடும். அது பெரும் பின்விளைவுகளையும் ஏற்படுத்தும். எனவே இதுபோன்ற நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த அரசியல் ரீதியான கொள்கை முடிவுகளை ஆட்சியாளர்கள் உறுதியாக எடுக்கவேண்டும். அதற்கான முதற்படியாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அதற்குப் பதிலீடான மோசாமான சட்டங்கள் இன்றி நீக்கவேண்டும்

# நூல் ஆயுதம்!

முத்துலிங்கம்



புத்தகம்தான் ஒருவனை வித்தகனாக்கும். நூலறிவுதான் ஒருவனுக்கு மேம்பட்ட அறிவைக் கொடுத்து அவனை வாலறிவனாக மாற்றும். அதனால் வாசிக்கும் பழக்கத்தை ஒருவன் வளர்த்துக் கொள்ள வேண்டும். வாசிப்பை நேசிப்பவன்தான் வையத்தில் மேல்நிலைக்கு வருவான். உணவின் சத்துகள் நம் குருதியில்தான் கலக்கும். புத்தகத்தின் சத்துக்கள்தான் நம் சித்தத்தில் கலந்து சிந்தனையைத் தெளிவாக்கும்.

பலர்ஏராளமானபுத்தகங்களை வாங்கிச் செல்கின்றனர். அவ்வளவு புத்தகங்களையும் அவர்கள் படிக்கிறார்களா அல்லது புத்தக அலமாரியில் அடுக்கி வைக்கிறார்களா என்பது நமக்குத் தெரியாது. எனக்குத் தெரிந்த பிரபலமான ஒருவர் வீட்டில் பல வகையான புத்தகங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. 'இவ்வளவு புத்தகங்களையும் படித்தீர்களா' என்று நான் கேட்டபோது, 'இவற்றையெல்லாம் படிக்க நேரம் எங்கே இருக்கிறது? ஏதோ ஒன்றிரண்டைப் படிப்பேன். புத்தகத்தை வாங்கிச் சேர்த்து வைப்பதில்எனக்கு ஆவல் அதிகம்" என்று கூறினார். அவர் போல் ஒருசிலர் இருக்கலாம்என்பதற்காக இதைச் சொல்கிறேன்.

உலக அளவில் சமுதாயப் புரட்சிக்கும், ஆட்சி மாற்றத்திற்கும் புத்தகங்கள்தான் காரணமாக இருந்திருக்கின்றன. வால்டேர், ரூசோ எழுதிய புத்தகங்கள் பிரெஞ்சுப் புரட்சிக்கு வித்திட்டன. ஹிட்லர் எழுதிய 'மெயின் கேம்ப்' என்ற புத்தகம்தான் ஜெர்மானியர்களை இன வெறியர்களாக மாற்றியது. புத்தகங்களால் தீமையும் நடந்திருக்கின்றது என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு.

அதேநேரத்தில் நூலகங்கள் மீது அதிக மதிப்பு வைத்திருந்தவர் ஹிட்லர். இங்கிலாந்துமீதுஜெர்மனி படையெடுத்தபோது, 'இலண்டன் நகரை எது வேண்டுமானாலும் செய்யுங்கள். அங்கிருக்கக் கூடிய நூலகங்களுக்கு எந்தச் சேதமும் ஏற்படக்கூடாது. அப்படி சேதப்படுத்தினால் சம்பந்தப்பட்ட வீரர்களுக்கு நான் கடுமையான தண்டனை விதிப்பேன்" என்று எச்சரித்தாராம்.

இலங்கையில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் தெற்காசியாவின் மிகப் பெரிய நூலகமாகிய யாழ்ப்பாணம் நூலகத்தை ஆட்சியாளர்களின் ஆதரவு பெற்ற வன்முறையாளர்கள், காடையர்கள் எரித்துச் சாம்பலாக்கினார்கள். நூலகத்தின் பெருமை புரியாத அறிவிலிகள் அவர்கள். காலம் அவர்களை நிச்சயம் தண்டிக்கும்.

இத்தாலியில் பிறந்த மாக்கியவல்லி எழுதிய 'பிரின்ஸ்' (இளவரசன்) என்ற நூல்தான் பிளவுபட்டுக் கிடந்த இத்தாலியை ஒன்றுபடுத்தியது. மாக்கியவல்லியின் மறைவுக்குப் பிறகுதான் இந்நூல் வெளிவந்தது. 20 ஆண்டுகளில் 25 பதிப்புகள் வெளிவந்தன.

பிரெஞ்சு நாட்டு மன்னன் பதினான்காம்லூயி இந்தநூலைத் தனது மார்பில் வைத்தபடியே தூங்குவானாம். அந்த அளவுக்கு இந்நூல்அவனைப்பாதித்திருந்தது.

வாட்டர்லூ போர்க்களத்தில் இடைவெளி கிடைக்கும் போதெல்லாம்இந்தநூலைப்படித்து மேலும் தன்னை ஊக்கப்படுத்திக் கொண்டான் மாவீரன் நெப்போலியன் என்று அவன் வாழ்க்கை வரலாறு கூறுகிறது. ஜெர்மனி நாட்டின் இரும்பு மனிதன் என்று சொல்லப்படும் பிஸ்மார்க், 'எனக்கு மிகவும்விருப்பமானநூல்பிரின்ஸ்" என்று குறிப்பிட்டிருக்கிறார். தனக்குத் தொடர்ச்சியான ஊக்கத்தைக் கொடுத்தது இந்த நூல்தான் என்று ஜெர்மனியின் சர்வாதிகாரியான ஹிட்லர் பதிவுசெய்திருக்கிறார். கார்ல் மார்க்ஸுஜீக்கு முன் ஐரோப்பிய அரசியலைப் புரட்டிப்போட்ட நூல் மாக்கியவல்லியின் 'பிரின்ஸ்' நூல்தான்.

தாமஸ்பெயின் எழுதிய 'கொமன்சென்ஸ்' என்ற நூல் பிரிட்டிஷ் பிடியிலிருந்து அமெரிக்க ஐக்கிய நாடுகள் விடுதலை பெறக் காரணமாக அமைந்தது. இந்த நூலைப் படித்த பிறகுதான் ஜோர்ஜ் வாஷிங்டன், தாம்சன், ஜெபர்சன், பெஞ்சமின்பிராங்கிளின் போன்றவர்கள் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் விடுதலைக்கு மிகத் தீவிரமாகப் போராடினர்கள். 47 பக்கங்கள் மட்டுமே கொண்ட இந்நூல் மூன்று மாதத்தில் 1 லட்சத்து 20 ஆயிரம் பிரதிகள் விற்றுத் தீர்ந்தன.

அதுபோல் அமெரிக்காவில் நிலவிய அடிமை முறையை எதிர்த்து மிகப்பெரிய உள்நாட்டுப் போரை ஏற்படுத்தியது 'ஹாரியட் பீச்சர்ஸ்டோஸ்' என்ற பெண்மணி எழுதிய 'அங்கிள் டாம்ஸ் கேபின்' என்ற நூல்தான்.

'நேஷனல் ஈரா' என்ற வார இதழில்ஓராண்டுகாலம்கற்பனை கலந்த கதையாக எழுதினார். இந்த நூல் ஒரே ஆண்டில் மூன்று லட்சம் பிரதிகள் விற்பனை ஆயின. ஐரோப்பாவிலும், காலனி நாடுகளிலும் 15 லட்சம் பிரதிகள் விற்றுச் சாதனை படைத்தது. இந்நூல் 22 மொழிகளில் வெளிவந்திருக்கிறது.

அமெரிக்க அதிபராக ஆபிரகாம் லிங்கன் வருவதற்கு இந்த நூல்தான் காரணம். 1862-ஆம் ஆண்டு ஆபிரகாம் லிங்கனைப்பார்ப்பதற்குவெள்ளை மாளிகைக்குச் சென்ற ஹாரியட் பீச்சர் ஸ்டோசை ஆபிரகாம் லிங்கன் வரவேற்றபோது 'மிகப் பெரிய உள்நாட்டுப் போரை புத்தகத்தின் மூலம் உருவாக்கிய இளைய நங்கையே வருக" என்று அழைத்து வரவேற்றாராம்.

'காரல் மார்க்ஸ் தனது திகேபிடல் (மூலதனம்) என்ற நூலை, லண்டன் மியூசியத்தில் இருந்த நூலகத்தில் ஒரு நாளைக்குப்பதினாறு மணிநேரம் செலவழித்துக்குறிப்புகளைத்திரட்டி 17 ஆண்டுகளில் எழுதி முடித்தார் என்று வரலாறு கூறுகிறது.

இந்த நூலைப் படித்த பிறகுதான் ரஷியாவில் லெனின் தலைமையில்முதல்கம்யூனிஸ்ட் ஆட்சி உருவானது. மா சேதுங் சீனாவில்கம்யூனிஸ்டு ஆட்சியை அமைப்பதற்கும் வியத்நாமில் ஹோசிமின்புதிய ஆட்சி அமைப்பதற்கும் கியூபாவில் பிடல் காஸ்ட்ரோவும், சே குவேராவும் சேர்ந்து புரட்சிகரமான ஆட்சியை அமைப்பதற்கும் 'மூலதனம்' என்ற நூல்தான் அடிப்படையாக விளங்கியது.

இந்தியாவின் விடுதலை வீரனான பகத்சிங் தூக்கிலிடப் படுவதற்குமுன்அவன்இறுதியாகப் படித்த புத்தகம் லெனின் எழுதிய 'த ஸ்டேட் அண்ட் ரொவல்யூஷன்' (அரசும் புரட்சியும்) என்ற புத்தகம் தான்.

அந்த நாளில் தமிழ்நாட்டிலேயே நூலகத்தை அதிகமாகப் பயன்படுத்திப் புத்தகம் படித்தவர்களில் தமிழ்நாட்டின் அறிஞர் அண்ணாவும், திராவிடர் கழகத்தைச்சேர்ந்தபட்டுக்கோட்டை அழகிரிசாமியும் குறிப்பிடத் தகுந்தவர்கள்.

சென்னையில் உள்ள கன்னிமாரா என்கிற பெரும் நூலகத்தையே கரைத்துக் குடித்தவர் அண்ணா. அங்கு தேடிக் கிடைக்காத ஒரு நூல் திருவல்லிக்கேணி சிங்காரவேலர் மாளிகையில் உள்ள நூலகத்தில் இருக்கிறது என்று கேள்விப்பட்டு அங்கு போய்த் தேடி எடுத்து அதைப் படித்தார். இதை அண்ணாவேசொல்லியிருக்கிறார். அதைப்போல பட்டுக்கோட்டை அழகிரிசாமியும் அவ்வப்போது அங்குசென்றுநூல்களைஎடுத்துப் படித்திருக்கிறார்.

அண்ணா அமெரிக்காவில் மருத்துவமனையில்இருந்தபோது அறுவைச் சிகிச்சைக்கு நேரமாகிவிட்டதுவாருங்கள்என்று மருத்துவர்மில்லர்அழைத்தபோது, கொஞ்சம் பொறுங்கள், இன்னும் அரை மணி நேரத்தில் இதைப் படித்து முடித்து விடுவேன். அதன் பின்னர் அறுவைச் சிகிச்சையை வைத்துக்கொள்ளலாம்என்றாராம் அண்ணா. அப்படி அண்ணா கடைசியாகப்படித்தஅந்தப்புத்தகம் மேரிகரோலின் என்ற பெண் எழுத்தாளர் எழுதிய 'மாஸ்டர் கிறிஸ்டியன்' என்ற புத்தகம்தான்.

அப்படியெல்லாம் அண்ணா படித்த காரணத்தால்தான் எந்த நேரத்தில் எந்தத் தலைப்பைக் கொடுத்து எந்த இடத்தில் பேசச் சொன்னாலும் பேசக்கூடிய ஆற்றல் பெற்றவராக இருந்தார். சிலர் புத்தகங்களைப் படிக்காத காரணத்தால்தான்மற்றவர்களிடம் எழுதி வாங்கி மேடையில் தாங்கள் பேசுவது போல் அதை வாசித்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால் பல தவறுகள் நிகழ்கின்றன. இது எல்லாருக்கும் தெரிந்த ஒன்று.

இந்தியாவின் முதலாவது பிரதமர் பண்டித ஜவாஹர்லால் நேரு விமானப் பயணம் செய்யும்போது – அது அரை மணி நேரப் பயணமாக இருந்தாலும் – குறைந்தது ஐந்து புத்தகங்களாவது எடுத்துச் செல்வாராம். இந்திரா காந்தி ஒருமுறை அவரிடம், 'இத்தனை புத்தகங்கள் எடுத்துச் செல்கிறீர்களே. அரை மணிநேரப் பயணத்தில்ஒருபுத்தகத்தைக்கூடப் படிக்கமுடியாதே. இவ்வளவையும் ஏன் எடுத்துச் செல்கிறீர்கள்' என்று கேட்டாராம்.

அதற்கு நேரு, 'அது எனக்கும் தெரியும். இருந்தாலும் ஏன் இத்தனை புத்தகம் எடுத்துச் செல்கிறேன் என்றால், இத்தனை அறிஞர்கள் என்னுடன் பயணிக்கிறார்கள் என்ற தெம்பு எனக்கு ஏற்படும். அதனால் துணிச்சலோடு எதையும் சொல்லலாம் என்ற நம்பிக்கையும் ஊக்கமும் எனக்குள் தோன்றும். அதனால்தான்இத்தனைப்புத்தகங்களை எடுத்துச் செல்கிறேன்'' என்றாராம்.

அதுமட்டுமல்லநான்மறைந்து விட்டால் என்னுடலில் மலர் மாலைகளை வைக்காதீர்கள். புத்தகங்களைப்பரப்பிவையுங்கள் என்பாராம் பண்டித நேரு. அதைப்போல் இன்றைக்கு எந்தத் தலைவர் சொல்கிறார்?

ஆக, புத்தகங்களும், நூலகங்களும்தான்புரட்சியாளர்களுக்கும், அறிவாளர்களுக்கும் வாளாயுதங்களாகவும் போராயுதங்களாகவும் பயன்படுகின்றன. அந்த வகையில் நூலாயுதம்தான் எழுத்தாளர்களுக்கு இன்றைக்கு வேலாயுதமாக இருக்கிறது. அந்த வகையில் நூலாயுதங்களை நாமும் சேகரிப்போம்.

காலைக்கதிர் Kalaikkathir

# 13,588 மாணவர்கள் ஒன்பது பாடங்களிலும் 'ஏ' தர சித்தி

## 2ஆம் இடத்தில் யாழ். வேம்படி மகளிர் கல்லூரி




வெளியிடப்பட்டுள்ள 2022 கல்வி பொதுத் தராதர சாதாரண தர பரீட்சை பெறுபேறுகளின் பிரகாரம் 2 லட்சத்து 45 ஆயிரத்து 521 மாணவர்கள் (72.07 வீதமானவர்கள்) உயர்கல்விக்குதகுதிபெற்றுள்ளனர். கடந்த வருடம் உயர்கல்விக்கு நூற்றுக்கு 62.63 வீதமானவர்கள் தகுதி பெற்றிருந்தனர்.

அத்துடன்கடந்தவருடம்அனைத்துபாடங்களிலும் 11ஆயிரத்தி 53பேர் ஏ சித்தி பெற்றிருந்தனர். அது 3.31 வீதமாகும். இந்த முறை 13ஆயிரத்தி 588பேர் 9 ஏ சித்திகளை பெற்றுள்ளனர். அது 3.99 வீதமாகும்.

அதன் பிரகாரம் வெளியிடப்பட்டுள்ள பெறுபேறுகளுக்கமைய முதலாம் இடத்தை கண்டி மஹாமாயா மகளிர் வித்தியாலய மாணவி ஒருவர் பெற்றுள்ளதுடன் இரண்டாம் இடத்தை யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர் கல்லூரி மாணவி ஒருவரும் மூன்றாம் இடத்தை கொழும்பு ரோயல் கல்லூரி மாணவனும் பிடித்துள்ளனர்.

அதேநேரம் 4ஆம் இடத்தை கொழும்பு ரோயல் கல்லூரி மற்றும் கம்பஹா திருச்சிலுவை மகளிர் வித்தியாலயம் பெற்றுள்ளதுடன் 6 ஆம் இடத்தில் 4 பேர் இருக்கின்றனர். காலி சங்கமித்தா மகளிர் கல்லூரியில் இரண்டுபேர், குருணாகல் மரியதேவ ஆண்கள் வித்தியாலயம், திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி, பத்தாம் இடத்தில் 2பேர் இருக்கின்றனர். அது கொழும்பு மியூசியஸ் கல்லூரி மற்றும் கண்டி உயர் மகளிர் கல்லூரி ஆகியனவாகும்.

உயர் கல்வி விடைத்தாள் மதிப்பீட்டுநடவடிக்கைதொழிற்சங்க நடவடிக்கை காரணமாக 3 மாதங்கள் பிற்படுத்தப்பட்டதால் கல்விப்பொதுத்தராதரசாதாரணதர பரீட்சை பெறுபேறுகள் வெளிவரத் தாமதமாகின.

என்றாலும் ஒகஸ்ட் மாதம் விடைத்தாள்மதிப்பீட்டுநடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு3மாதங்களுக்குள் பெறுபேறுகளை வெளியிட நடவடிக்கை எடுத்தமை தொடர்பில் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேநேரம் இறுதியாக வெளியிடப்பட்ட கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சை பெறுபேறுகளின் பிரகாரம் பல்கலைக்கழகங்களுக்கு ஏற்புடைய பீடங்களுக்கு இணைத்துக்கொள்வதற்கான வெட்டுப்புள்ளி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் நேற்று (வெள்ளிக்கிழமை) வெளியிடப்பட்டது.

இதற்கு முன்னரான காலங்களில் உயர் தர பரீட்சை இடம்பெற்று நீண்ட காலத்துக்குப் பின்னரே வெளியிடப்பட்டிருக்கிறது.

என்றாலும் இந்த முறை 6 மாதங்களுக்குள் வெட்டுப்புள்ளி வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதன்பிரகாரம்பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பித்த மாணவர்கள் எந்த பீடங்களுக்கு தகுதி பெற்றுள்ளார்கள் என்பதை இணையத்தளம் ஊடாக வெட்டுப்புள்ளியுடன் பார்த்துக்கொள்ள முடியும். - என்றார்.(05)

# களுவாஞ்சிக்குடியில் களைகட்டிய 'கலைகளின் சங்கமம்' நிகழ்வு




(வி.ரி. சகாதேவராஜா)

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகத்தின் ''கலைகளின் சங்கமம்' நிகழ்வு பிரதேச செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் பிரதேச செயலாளர் சிவப்பிரியா வில்வரத்னத்தின் தலைமையில் கோலாகலமாக இடம்பெற்றது.

பிரதேசசெயலகஉத்தியோகத்தர்கள் மற்றும் பிள்ளைகளின் கலை மற்றும் இலக்கியத் திறமைகளை வெளிப்படுத்தும் வகையில் பிரதேச செயலாளர் சிவப்பிரியா வில்வரத்னத்தின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.



கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் பன்னிருமாத வேலைத் திட்டங்களின் ஓர் அங்கமாகவும் 'கலைகளின் சங்கமம்' நிகழ்வு இடம்பெற்றது.

இரு கட்டங்களாக இடம்பெற்ற இந்த நிகழ்வில் முதலாவது கட்டமாக அலுவலக உத்தியோகத்தர்களுக்கான கலை நிகழ்வுகளும்,


இரண்டாவது கட்டமாக அலுவலக உத்தியோகத்தர்களின் பிள்ளைகளுக்கான கலை நிகழ்வுகளும்இடம்பெற்றன.

கவிதை, பாடல்கள், வில்லுப்பாட்டு, பாரம்பரிய மற்றும் கிராமிய நடனங்கள் என்பன உத்தியோகத்தர்களினாலும், அவர்களது பிள்ளைகளினாலும் ஆற்றுகை செய்யப்பட்டதுடன், பிள்ளைகளின் கைவண்ணத்தில் உருவான ஓவியப் படைப்புகளும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தமை விசேட அம்சமாகும்.

இந்த நிகழ்வில் அலுவலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் உத்தியோகத்தர்களது பிள்ளைகள் என பலரும் கலந்து கொண்டிருந்ததுடன், தமது திறமைகளை வெளிக்காட்டிய பிள்ளைகள் அனைவருக்கும் சான்றிதழ் மற்றும் பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டது.

இந் நிகழ்வினை பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்களான திரு ப. ராஜதிலகன் மற்றும் திருமதி பக்தகௌரி மயூரவதனன் ஆகியோருடன் இணைந்து ஏனைய அலுவலக உத்தியோகத்தர்கள் ஒழுங்கமைத்திருந்தனர்.





# கிளிநொச்சியில்

# ஐஸ்வர்யம் பெருவிருந்து மண்டபம்

## Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road, Kilinochchi



- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL

## BANQUET MEALS HALL





**FULL OPTION**

**MAIN DIHES**

Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=

Chikne Fried Rice with Vegetable - 1150/=

Kothu Rotty With Vegitable in Indian Style

**DESSERT**

| | |
|---|---|
| Ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| Ice Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

**SPECIAL MENU PACKAGE**

**BEVERAGES**

| | |
|---|---|
| JUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swabpoos Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |

காலைக்கதிர்
Kalaikkathir

# யாழ். புனித சாள்ஸ் வித்தி. மாணவர்களுக்கு லயன்ஸ் கழகத்தால் பாடசாலை உபகரணம்








யாழ்ப்பாணம் புனித சாள்ஸ் மகா வித்தியாலய தெரிவுசெய்யப் பட்ட மாணவர்களுக்கு லயன்ஸ் கழகத்தினரால் 75 ஆயிரம் ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங்கள் வழங்கிவைக்க ப்பட்டன.

கல்லூரிமுதல்வரும்லயன்ஸ்கழக ஆளுநர்சபைஉறுப்பினருமானலயன் கே.லெனின்குமார் தலைமையில் நடைபெற்றஇந்தநிகழ்வில்பாடசாலை உபகரணங்களை, மாவட்ட ஆளுநர் லயன் பிளஸிடஸ் எம் பீற்றர், அகில இலங்கை லயன்ஸ் கழகங்களின் முன்னாள் தலைவர் லயன் தேவா டி பீற்றர், முன்னாள் ஆளுநர் லயன் எஸ்.எஸ்.தங்கராஜா ஆகியோர் கலந்து மாணவர்களுக்குவழங்கிவைத்தனர்.

லயன்ஸ்கழக ஆளுநர்சபையின் ஆலோசகர் லயன் ஐ.மயூரதனின் நிதி அனுசரணையில் நடைபெற்ற இந்த உபகரணங்கள் வழங்கும் செயற்றிட்டத்தை உரும்பிராய் லயன்ஸ் கழகமும் யாழ்ப்பாணம் நகர லயன்ஸ் கழகமும் இணைந்து மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (05)

# அம்பாறையிலுள்ள வைத்தியசாலைகளின் குறைபாடுகளை நிவர்த்தி செய்யவேண்டும்

## பைசல் காசிம் கோரிக்கை

அம்பாறை மாவட்டத்தில் இருக்கும் அதிகமான மாகாண வைத்தியசாலைகளுக்கு போதுமான வசதிகள் இல்லா மையால் அங்கு முறையான வைத்தியம்இடம்பெறுவதில்லை.

அதனால் மத்திய அரசாங் கத்தால் அந்த வைத்திய சாலைகளுக்கு போதுமான நிதியை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்எனஎதிர்க்கட்சி உறுப்பினர் பைசல் காசிம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம் பெற்ற அடுத்த வருடத்துக்கான வரவு செலவு திட்டத்தில் சுகாதார அமைச்சுக்கான ஒதுக்கீட்டு சட்டமூலம் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

அம்பாறை மவட்டத்தில் பொத்துவில், கல்முனை மற்றும் சம்மாந்துறை ஆகிய தொகுதிகளில் சுமார் 5 லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இதில்மத்தியஅரசாங்கத்துக்கு கீழ் 3 வைத்தியசாலைகளும் கல்முனை பிராந்திய சுகாதார சேவை திணைக்களத்தின் கீழ் 26 வைத்தியசாலைகளும் 4 ஆதார வைத்தியசாலைகளும் இருக்கின்றன.

இந்த வைத்தியசாலைகளில் மருந்து தட்டுப்பாடு, வைத்தியர் தட்டுப்பாடு, உபகரண தடுப் பாடு இருந்து வருகிறது. இந்த தேவைப்பாடுகளை பெற்றுக் கொள்வது பெரும் சவாலுக் குரியதாகவே இருந்து வருகிறது. அதனால் இத்தனை வைத்திய சாலைகள் இருந்தும் அங்கு முறையான வைத்தியம் இடம் பெறுகிறதா என்பது கேள்விக் குறியாகவே இருக்கிறது.

இருந்தபோதும் நான் சுகாதாரா இராஜாங்க அமைச் சராக இருந்தபோதும் சீன அரசாங்கத்தின் உதவியுடன் 13 வைத்தியசாலைகளை அமைத்தோம். அதில் சம்மாந் துறை மற்றும் பொத்துவில் பிரதேசத்தில் இரண்டு வைத்தி யசாலைகளை அமைத்தோம். இந்தஇரண்டுவைத்தியசாலைக ளிலும் சுமார் 80 வீத பணிகள் முடிவடைந்துள்ளன.

ஆனால்4வருடங்களாகியும் இந்த வைத்தியசாலைகளின் பணிகள் பூர்த்தி செய்யாததால் திறக்கப்படாமல்இருந்துவருகின் றன. அதனால் இந்த வைத்திய சாலைகளின்பணிகளைப்பூர்த்தி செய்து விரைவாக இதனைத் திறந்து வைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அத்துடன்மாகாணவைத்திய சாலைகளுக்கு போதுமான நிதி வழங்கப்படாமல் இருப்பதால் அதிகமான வைத்தியசாலைகள் பாதிக்கப்பட்டுள்ளன.அமைச்சர் ராஜித சேனாரத்ன சுகாதார அமைச்சராகஇருக்கும்போதுஇது தொடர்பாகக் கவனம் செலுத்தி மத்திய அரசாங்கத்தின் நிதியில் இருந்துமாகாணவைத்தியசாலை களுக்குஉதவிசெய்யநடவடிக்கை எடுத்து வந்தார். ஆனால் தற்போது இந்த நடவடிக்கை இடம்பெறுவதில்லை. அதனால் இந்தநடவடிக்கையைமீளஆரம் பித்து மாகாண வைத்தியசா லைகளை தேவைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். - என்றார். (05)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்

SUPERMARKET

4th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

## சுகாதார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சில மாற்றங்களைச் செய்தோம். அடுத்த வாரத்திலும் இதுபோன்ற சில மாற்றங்களைச் செய்ய தயாராக இருக்கிறோம். மனித வளங்கள், சட்டவிதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளில்மாற்றங்களைச் செய்யவும் எதிர்பார்க்கிறோம். மருந்துக் கொள்வனவு செயல் முறையிலும்பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட்டன.

குறிப்பாக, 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளின் ஊடாக, மருந்துப்பொருட்களைகொள்வனவு செய்வது தொடர்பான விசேட வழிகாட்டுதல்களை வெளியிடுதல் மற்றும் அதற்கென தனியான நிறுவனமொன்றை ஸ்தாபிப்பது குறித்துகவனம்செலுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம்,மருந்துஇறக்குமதியின் போது இடம்பெறும் ஊழல், முறைகேடுகள் மற்றும் பிற சர்ச்சைக்குரிய சம்பவங்களைத் தவிர்க்க முடியும்.

நாட்டில் உள்ள மருந்துகளின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில்,இந்நாட்டில்மருந்துகளை உற்பத்தி செய்யவும், அவற்றை சந்தைக்கு அறிமுகப்படுத்தும் பணியை மேலும் அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சுகாதாரத் துறையில் தாக்கம் செலுத்தும் மனித வள மேலாண்மைக்காக மக்கள் விரும்பாத முடிவுகளைஎடுக்கவேண்டியுள்ளது. அதற்காக,பதவிகளில்பலமாற்றங்கள் செய்யப்பட்டன. இந்த ஒவ்வொரு மாற்றங்களுடனும், தற்போது மருந்துகள் தொடர்பில் நிலவும் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்று எதிர்பார்க்கின்றோம்.

ஆரம்பசுகாதாரநிலையங்களில் சிலசீர்திருத்தங்களைமேற்கொள்ளத் தயாராகி வருகிறோம். அனைவருக்கும்ஒரே மாதிரியான சுகாதார சேவையை எவ்வாறு வழங்குவது மற்றும்சமூகப்பாதுகாப்புவழங்குவது குறித்து உலகில் தற்போது கவனம் செலுத்தப்பட்டுவருகின்றது. அதற்காக உலக சுகாதார நிறுவனத்துடன் சுகாதார அமைச்சு இணைந்து செயல்பட்டு வருகிறது.

தற்போது பெய்து வரும் மழையால் டெங்கு நோய் பரவல் அதிகரித்து வருகிறது. சுகாதார குழுக்களின் முயற்சிகளினால் கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு டெங்கு நோய் இறப்பு விகிதத்தை குறைக்க முடிந்தது என்றார்.

## போதகர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லும் மீண்டும் அவரை இன்று (நேற்று) காலை குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு வருமாறு அறிவித்தல் வழங்கப்பட்டது.

அதனடிப்படையில்வாக்குமூலம் வழங்குவதற்காக மீண்டும் குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு சென்றிருந்த அவர் கைது செய்யப்பட்டார்.

உடனடியாகவே கோட்டை நீதிவான் நீதிமன்றில் போதகர் ஜெரோம் பெர்னாண்டோ முன்னிலைப்படுத்தப்பட்டுவிளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

## ரணில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாற்றவுள்ளார்.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் காலநிலை மாற்றம் தொடர்பிலான மூன்று யோசனைகளை இந்த மாநாட்டில் இலங்கை முன்வைக்கவுள்ளது.

## டீசல் விலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலை போக்குவரத்து சேவைகளில் ஈடுபடும் பேருந்துக் கட்டணங்களிலும் மாற்றம் ஏற்படுத்தப்படமாட்டாது என அகில இலங்கை பாடசாலை மாணவர்கள் போக்குவரத்து சங்கம் தெரிவித்துள்ளது.

அத்துடன், வற்வரி அதிகரிக்கப்பட்டபின்னர் உதிரிப்பாகங்களின் விலைகள் அதிகரிக்குமெனவும், அவ்வாறான சந்தர்ப்பங்களில் கட்டணங்களை அதிகரிக்க நேரிடுமெனவும் அச்சங்கம் குறிப்பிட்டுள்ளது.

## 5 ஆயிரம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவு செய்யப்பட்டு, 5000 மாணவர்களுக்கு மாதாந்தம் 6000 ரூபா புலைமைபரிசில் வழங்கப்படவுள்ளது.

கடந்த வருடத்தில் 3000 மாணவர்களுக்கு 24 மாதங்களாக ஜனாதிபதி நிதியத்தினால் ,எ;ளுஆ; புலைமைப் பரிசில் வழங்கப்பட்டது.

2022(2023)ஆண்டில்க.பொ.த (சா.த) பரீட்சைக்கு முதன்முறையாக தோற்றி, சித்தியடைந்து உயர்தரவ; பயில்வதற்குதகுதிபெற்றிருப்பது,அரச அல்லது கட்டணம் அறவிடப்படாத தனியார் பாடசாலையில் கல்வி கற்பது, குடும்ப, மாத வருமானம் 100,000 ரூபாவிற்கு குறைவாக இருப்பது ஆகியன இந்தப் புலமைப் பரிசிலுக்கு விண்ணப்பிப்பதற்கான அடிப்படைத் தகுதியாகக் கருதப்படுகிறது.

இந்தப் புலைமைப்பரிசில் வேலைத்திட்டத்திற்கான விண்ணப்பப் படிவத்தை ஜனாதிபதி செலயகம் (presidentsoffice.gov.lk) ஜனாதிபதி நிதியம் (presidentsfund.gov.lk) ஜனாதிபதி ஊடகப் பிரிவு (pmd.gov.lk) ஆகியவற்றின் இணையதளங்கள் மூலமாகத் தறவிறக்கம் செய்யலாம்.

அந்த விண்ணப்பங்களை உரிய முறையில் பூர்த்தி செய்து சாதரண தரம் கற்ற பாடசாலை அதிபர்களிடத்தில் கையளிக்கப்படவேண்டும். இந்த வேலைத் திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுக்க பாடசாலை மாணவர்கள் மற்றும் அதிபர்களின் ஒத்துழைப்பை ஜனாதிபதி நிதியம் எதிர்பார்க்கிறது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



# சுவசெரிய அம்புலன்ஸ் சேவையாளர்களின் சம்பளத்தை ரூ. 10 ஆயிரத்தால் அதிகரிக்குக

## ஹர்ஷ டி சில்வா கோரிக்கை

சுவ செரிய இலவச அம்புலன்ஸ் சேவையை விமர்சித்தவர்களுக்கு மன்னிப்பு வழங்குகிறேன். இந்த சேவையில் உள்ளவர்கள் 24 மணித்தியாலங்களும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றுகிறார்கள்.

ஆகவே அவர்களுக்கான கொடுப்பனவை 10 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அமர்வின் போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டா.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

இந்திய அரசாங்கத்தின் நன்கொடையின் அடிப்படையில் சுவசெரிய இலவச அம்புலன்ஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டது. இந்த சேவை ஆரம்பிக்கப்பட்ட போது பலர் தவறான விமர்சனங்களை முன்வைத்தார்கள், எதிர்ப்பு தெரிவித்தார்கள். அவர்களுக்கு நான் மன்னிப்பு வழங்குகிறேன். இந்த சேவை தோல்வி என்று எவராலும் குறிப்பிட முடியாது.

சுவசெரிய அம்புலன்ஸ் சேவைக்கு ஒரு நாளைக்கு மாத்திரம் 5300 தொலைபேசி அழைப்புகள் கிடைக்கப்பெறுகின்றன. முதல் அழைப்பிலேயே பொது மக்களுக்கு சேவை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. சுவ செரிய அம்புலன்ஸ்க்குள் 684 பிரசவங்கள் இடம்பெற்றுள்ளன.

சுவசெரிய அம்புலன்ஸ் சேவையில் உள்ள அம்புலன்ஸ்கள் ஒரு நாளைக்கு மாத்திரம் 24,692 கிலோமீற்றர் தூரம் பயணிக்கின்றன. நகரப்புறங்கள் உட்பட கிராம புறங்களிலும் இந்த சேவை வினைத்திறனான முறையில் முன்னெடுக்கப்படுகிறது.

1461 சேவையாளர்களுக்கான கேள்வி காணப்படுகின்ற நிலையில் 1210 பேர் மாத்திரமே தற்போது சேவையில் உள்ளார்கள்.

ஆகவே காணப்படும் வெற்றிடங்களைப் பூர்த்தி செய்ய சுகாதார அமைச்சு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். சுவசெரிய சேவைத்திட்டத்தின் சேவையாளர்கள் 24 மணித்தியாலங்களும் அர்ப்பணிப்புடன் சேவையில் ஈடுபடுகிறார்கள். ஆகவே அவர்களுக்கு 10 ஆயிரம் ரூபா சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறேன்.

கடந்த ஆண்டு பொருளாதார நெருக்கடியின் போது சுவசெரிய அம்புலன்ஸ் சேவை பாரிய நெருக்கடிக்குள்ளாகியிருந்தது. எரிபொருள்



விநியோகம், உள்ளிட்ட இதர தேவைகளில் இச்சேவைக்கு முன்னுரிமை வழங்குமாறு அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் வலியுறுத்தினேன். அவர் எமது கோரிக்கையை நிறைவேற்றினார். அதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். - என்றார்.(05)

# பொலிஸ் பயங்கரவாதத்துக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறுகிறார்



திட்டமிட்டு தமிழ் மக்கள் மீது திணிக்கப்படுகின்ற பொலிஸ் பயங்கரவாதத்திற்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குறிப்பிட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அமைப்பாளர் உள்ளிட்டவர்களை மட்டு சிறைச்சாலைக்கு சென்று சந்தித்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தர்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

தமிழ் மக்கள் மீது திணிக்கின்ற பொலிஸ் பயங்கரவாதத்திற்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கையை நாங்கள் மேற்கொள்வோம்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கடந்த 25, 27 ஆம் திகதி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கட்சியைச் சேர்ந்த இருவர் உட்பட 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதில் அரசாங்கமே நினைவு கூறலாம் எனத் தெரிவித்துவிட்டு வடக்கு கிழக்கிலே மூதூர் சம்பூரை தவிர தவிர அனைத்து நீதிமன்றங்களிலும் தடை உத்தரவு பெறுவதற்கு பொலிஸார் முயற்சி எடுத்தபோது அனைத்து நீதிமன்றங்களிலும் நினைவு கூருவதற்கு உரிமை உண்டு எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

அதேவேளை விடுதலைப் புலிகள் தடைசெய்யப்பட்ட அமைப்பு என்ற வகையில் அந்த அமைப்பின் சின்னங்கள் இல்லாமல் அந்த நினைவேந்தல் நடைபெறமுடியும் எனவும் கட்டளை வழங்கப்பட்டது.

இந்த நிலையில் அந்த நினைவேந்தலில் கலந்துகொண்டு அதனை ஒழுங்கு செய்த ஒரே ஒரு காரணத்திற்காக இந்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ்மக்கள் நியாயமில்லாத பயங்கரவாத தடைச் சட்டத்தைத் தெரிந்து அதனுள் போகாது நடந்துகொண்ட போதும் அவர்கள் மீது குறிவைக்கப்படுகின்றது.

இதனைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியாக கடுமையாக எதிர்க்கின்றோம்.

இந்தப் பயங்கரவாதத்தை மக்கள் மீது திணிக்கின்ற செயற்பாடுகளுக்கு அடிபணியாது நாங்கள் இதை எதிர்நோக்க வேண்டும் என்பதுதான் எங்கள் விருப்பம். நாங்கள் இதனை எதிர்கொள்வோம். - என அவர் மேலும் தெரிவித்தார். (05)

# போதைப்பொருள் பாவனையால் எயிட்ஸ் நோயாளர்கள் அதிகரிப்பு

## வடமாகாணம் தொடர்பில் வைத்திய நிபுணர் எச்சரிக்கை




யாழ்ப்பாணத்தில் அதிகரித்துவரும் போதைப்பொருள் பாவனையால் எயிட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து இருக்கலாம் என வடபிராந்திய பாலியல் நோய் தடுப்பு சிகிச்சை நிலைய வைத்திய நிபுணர் வைத்தியர் ஏ.றொகான் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஒவ்வொரு ஆண்டும் எயிட்ஸ் தொற்றால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை சராசரியாகக் கூடிக் கொண்டே போகின்றது.

குறிப்பாக யாழ்ப்பாணத்தில் தற்போது பெருமளவான போதைப்பொருள் பாவனையாளர்கள் இரத்த நாளங்களின் ஊடாக உடலில் போதைப் பொருளை ஏற்றிக்கொள்கின்றார்கள்.

அதனால் எயிட்ஸ் போன்ற தொற்று நோய்பரவும் அபாயம் காணப்படுகிறது.

சாதாரண ஒரு சிறிஞ் மூலம் ஓர் ஊசியை பலர் பாவிப்பதால் ஒருவருக்கு எயிட்ஸ் தொற்று இருந்தால், அதனைப் பாவிக்கும் மற்றவருக்கும் தொற்றக்கூடிய சாத்திய கூறுகள் அதிகமாகக் காணப்படுகின்றது.

இலங்கையில் தற்போது 5500 பேர் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அதிலே வடக்கு மாகாணத்தை எடுத்துக் கொண்டால் 90 பேர் இன்றுவரைக்கும் எச்ஐவி தொற்று உள்ளவர்கள் என இனங்காணப்பட்டுள்ளார்கள்.

அதில் யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை சுமார் 65 பேர் எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டு அடையாளப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(05)

# பொலிஸ் மா அதிபர் நியமனத்தில் ஜனாதிபதி அரசமைப்பை மீறினார்

## எம்.ஏ.சுமந்திரன் குற்றச்சாட்டு

அரசமைப்பைத் தெரிந்துகொண்டே மீறினால் ஜனாதிபதி பதவியில் இருந்து அவரை நீக்குவதற்கு அது போதுமான காரணமாக இருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

மன்னாரில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

அரசமைப்பு பேரவையினுடைய அனுமதி இல்லாமல் பொலீஸ் மா அதிபர் நியமிக்கப்பட முடியாது. ஜனாதிபதி ஒட்டு மொத்தமாக அரசமைப்பை மீறிச் செயற்படுகிறார்.

அத்துடன் பதில் பொலிஸ் மா அதிபரைக்கூட நியமிக்க முடியாது.

இந்தவிடயம் தொடர்பாக எதிர்வரும் நாள்களில் சில சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்குத் தீர்மானித்திருக்கிறோம்.



அத்தோடு கட்சி உறுப்பினர்களோடும் இன்றைய அரசியல் சூழ்நிலைகள் சம்பந்தமாக ஒரு சிறு கலந்துரையாடல் ஒன்று நடைபெற்று இருக்கிறது. - என அவர் மேலும்

# வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட 2 துப்பாக்கிகளுடன் மான் இறைச்சி வைத்திருந்தவர் புத்தளத்தில் கைது

புத்தளம் - மஹாகும்புக்கடவெல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட 2 துப்பாக்கிகளுடன் மான் இறைச்சி வைத்திருந்த சந்தேக நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் மஹாகும்புக்கடவெல பிரதேசத்தை சேர்ந்த 33 வயதுடையவராவார்.

மஹாகும்புக்கடவெல பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசாரணையில் அனுமதிப்பத்திரமற்ற வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட 2 துப்பாக்கிகள் மற்றும் விற்பனைக்காக வைத்திருந்த மான் இறைச்சிகள் ஆகியன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மஹாகும்புக்கடவெல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்தவர் 35 ஆயிரம் ரூபா பணத்துடன் சிக்கினார்

வெல்லம்பிட்டிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் 35 ஆயிரம் ரூபா பணத்துடன் ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்த சந்தேக நபர் ஒருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் வியாழக்கிழமை மாலையில் இடம்பெற்றுள்ளது.

கைதுசெய்யப்பட்டவர் வெல்லம்பிட்டிய பிரதேசத்தை சேர்ந்த 37 வயதுடையவராவார்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபரிடத்திலிருந்து 35 ஆயிரம் ரூபா பணம் , 7 கிராம் 250 மில்லிகிராம் நிறையுடைய ஐஸ் போதைப்பொருள் மற்றும் கையடக்கத்தொலைபேசி என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெல்லம்பிட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

காலைக்கதிர் Kalaikkathir




# மருந்து தட்டுப்பாட்டுக்கு வெகுவிரைவில் தீர்வாம்

## சுகாதாரத்துறை அமைச்சர் உத்தரவாதம்

சுகாதார கட்டமைப்பில் மருந்து தட்டுப்பாடு தற்போதைய பிரதான பிரச்சினையாக உள்ளது. அவசர மருந்து கொள்வனவு இடைநிறுத்தப்பட்டுள்ளது.

முறையான வழிமுறைகளுக்கு அமையவே இனி மருந்து கொள்வனவு செய்யப்படும். முறையான திட்டமிடலுடன் மருந்து தட்டுப்பாட்டுக்கு வெகுவிரையில் தீர்வு எட்டப்படும்.

சுகாதார சேவையாளர்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்கு பேச்சு ஊடாகத் தீர்வு வழங்கப்படும். நிதி நெருக்கடிக்கு மத்தியில் சுகாதார சேவையை சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்ல அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என சுகாதாரத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரன வலிறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் சுகாதார அமைச்சுக்கான செலவீனத் தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

நாட்டின் சுகாதாரத்துறை ஒட்டுமொத்த மக்களையும் உள்ளடக்கியதாக காணப்படுகிறது. 23 ஆயிரம் வைத்தியர்கள், 43 ஆயிரம் தாதியர்கள், உட்பட மருத்துவ கட்டமைப்பில் ஒரு லட்சத்து 46 ஆயிரம் சேவையாளர்கள் உள்ளார்கள்.

நாட்டில் ஐந்து கிலோமீற்றர் தூரத்துக்கு இடையில் மருத்துவ சிகிச்சை நிலையம் அல்லது மருத்துவமனை இருப்பது சுகாதார துறையின் முன்னேற்றகரமான இலட்சினையாகும்.

நாட்டில் மருந்து தட்டுப்பாடு பிரதான பிரச்சினையாக காணப்படுகிறது. அவசர மருந்து கொள்வனவு தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. முறையான வழிமுறைகளுக்கு அமைவாகவே இனி மருந்து கொள்வனவு செய்யப்படும். இதற்கான ஆலோசனைகள் தேசிய மருந்தக கூட்டுத்தாபனத்துக்கு வழங்கப்பட்டுள்ளன.

தரமான மருந்து கொள்வனவுக்கும், தேசிய மட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் மருந்துகளுக்கு முன்னுரிமை வழங்குமாறும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

சுகாதாரக் கட்டமைப்பில் தற்போது பயன்பாட்டில் உள்ள 850 வகையான மருந்துகளில் 210 வகையான மருந்துகள் தேசிய மட்டத்தில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

ஆட்சியில் இருந்த கடந்த அரசாங்கங்கள் மற்றும் முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சர்கள் முன்னெடுத்த செயற்திட்டங்களால் இந்த இலக்கை அடைய முடிந்துள்ளது என்பதை அரசியலுக்கு அப்பாற்பட்ட வகையில் ஏற்றுக்கொள்ள வேண்டும். பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் பல்வேறு காரணிகளை முன்னிலைப்படுத்தி பெருமளவிலான வைத்தியர்கள் மற்றும் தாதியர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்கள்.

சுகாதார சேவையாளர்கள் நாட்டை விட்டு வெளியேறுவது சிறந்த எடுத்துக்காட்டல், இவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண ஜனாதிபதியுடன் பேச்சில் ஈடுபட்டுள்ளேன். சாதகமான தீர்வு கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறேன்.

பொருளாதாரப் பாதிப்புகளால் கடந்த ஆண்டு மந்தபோசனை வீதம் உயர்வடைந்தது. இதற்கு அறிவியல் ரீதியில் பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன.

கடந்த ஆண்டை காட்டிலும் இந்த ஆண்டு மந்த போசனை வீதம் 1.2 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது. பாடசாலை மாணவர்களுக்கும், முன்பள்ளி பாடசாலை மாணவர்களுக்கும் பகலுணவு வழங்குவதற்கு தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களுடன் பேச்சு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வருடாந்தம் 60 லட்சம் பேர் விபத்துக்களால் வைத்தியசாலைகளில் சேர்க்கப்படுகிறார்கள். இதில் 10 லட்சம் பேர் வீதி விபத்து, வீட்டு விபத்து மற்றும் நீரில் மூழ்குதல் உள்ளிட்ட பல்வேறு விபத்துக்களால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

வீதி விபத்து உள்ளிட்ட பல்வேறு விபத்துக்களால் மாத்திரம் வருடாந்தம் 12 ஆயிரம் பேர் உயிரிழக்கிறார்கள். நாளாந்தம் குறைந்த பட்சம் 30 பேர் உயிரிழக்கிறார்கள். வீதி விபத்துக்களால் 12 ஆயிரம் பேர் வருடாந்தம் உயிரிழப்பது என்பது பேரிழப்பாகும். வீதி விபத்துக்களைத் தடுப்பதற்கு துறைசார் தரப்பினருடன் கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டுள்ளது. நாட்டு மக்கள் அனைவரும் பொறுப்புடன் செயற்பட வேண்டும். வீதி சட்டத்திட்டங்களை முறையாகக் கடைப்பிடித்தால் வீதி விபத்துக்களைக் குறைத்துக் கொள்ள முடியும். - என்றார். (05)


JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
138, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

# யாழ். பல்கலை மாணவர்களுக்கு இந்திய அரசின் விசேட நிதியுதவி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள்100 பேருக்கு, இந்திய அரசினால் வழங்கப்படவுள்ள நிதியுதவிச் செயற்றிட்டம் நேற்றுத் தொடக்கி வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்துக்கு மூன்று நாள்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே இந்த நிதியுதவித் திட்டத்தை இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வைத்தார். இத்திட்டத்துக்கான முதற்கட்ட நிதி ரூபா மூன்று மில்லியன் நேற்றுக் காலை இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேயினால் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் மற்றும் மாணவர் பிரதிநிதிகளிடம் கையளிக்கப்பட்டது. அத்துடன் இந்திய அரசினால் வழங்கப்படும் கலாசார உறவுகளுக்கான பேரவையின் உயர்கல்விப் புலமைப்பரிசில் (ஐ.சி.சி.ஆர்) பெற்று இந்தியாவில் உயர்கல்வி பெறச் செல்லும் இந்து கற்கைகள் பீட விரிவுரையாளர்கள் இருவருக்கான அனுமதிக் கடிதங்களும் வழங்கி வைக்கப்பட்டது.

இந்தநிகழ்வில் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, யாழ்ப்பாணம் இந்தியத் துணைத்தூதுவர் ராகேஷ் நடராஜ் ஜெயபாஸ்கரன், கொழும்பிலுள்ள இலங்கைக்கான இந்தியத் தூதரக அதிகாரிகள், யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள், பல்கலைக்கழகப் பதிவாளர், நிதியாளர், பீடாதிபதிகள் மற்றும் மாணவர் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

பொருளாதார நிலையில் சவாலுக்குட்பட்டுள்ள பல்கலைக் கழக மாணவர்கள் 100 பேரின் வாழ்வாதாரச் செயற்பாடுகளுக்காக ஒவ்வொருவருக்கும் மாதாந்தம் தலா ஐயாயிரம் ரூபா விசேட நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த மே மாதம் 11ஆம் திகதி, யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையத்தை யாழ்ப்பாண மக்களுக்கு உவந்தளிக்கும் நிகழ்வுக்கு இந்தியப் பிரதமரின் விசேட பிரதிநிதியாக வந்திருந்த துணை அமைச்சர் கலாநிதி எல். முருகன் அறிவித்தபடி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மாணவர்களில் பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ள குடும்பங்களைச் சேர்ந்த 100 பேருக்கு விசேட நிதியுதவியை வழங்குவதற்கு இந்திய அரசாங்கம் முடிவு செய்திருந்தது.

இந்தத் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் சகல பீடங்களில் இருந்தும் தெரிவு செய்யப்பட்டு முன்மொழியப்பட்ட ஒவ்வொரு மாணவனுக்கும் நடப்புக் கல்வி ஆண்டில் இருந்து, அடுத்து வரும் ஒரு வருட காலத்துக்கு இந்த நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

## 3000 பேரில் ஒருவர் எய்ட்ஸால் பாதிப்பு

### சன்ன ஜயசுமன தகவல்



நாட்டில் 6000 பேர் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். மொத்த சனத்தொகையில் 3000 பேரில் ஒருவர் எய்ட்ஸ் நோயாளராக உள்ளனர். இதனை அலட்சியப்படுத்த முடியாது. பாலியல் நோய் தடுப்பு தொடர்பில் சுகாதார அமைச்சு விசேட கவனம் செலுத்த வேண்டும் என முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் சுகாதார அமைச்சுக்கான செலவீனத் தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு –

சுகாதார அமைச்சராக பதவி வகித்ததால், தான் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது உரையில் குறிப்பிட்டார். ஆகவே, அவரது வழியில் செல்ல சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரணவுக்கு கடவுள் துணை புரிய வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

மருந்து ஒழுங்குபடுத்தல் சட்டம் தற்போதைய சூழ்நிலைக்கு பொருத்தமற்றதாக உள்ளது. ஆகவே தற்போதைய நிலைக்கு அமைய அந்த சட்டம் திருத்தம் செய்யப்பட வேண்டும். மக்கள் குறைந்த விலையில் மருந்துகளை பெற்றுக்கொள்வதற்கு நாடளாவிய ரீதியில் 50 அரச மருந்தகங்கள் (ஒசுசல) புதிதாக உருவாக்கப்பட வேண்டும்.50 ஒசுசலவிற்கான நடவடிக்கைகள் கடந்த அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டன.அவற்றை செயற்படுத் துமாறு அமைச்சரிடம் வலியுறுத்துகிறேன்.

மருந்துக் கொள்வனவு தரவு கட்டமைப்பு தொடர்பில் பாரிய பிரச்சினைகள் காணப்படுகின்றன.கடந்த அரசாங்கத்தில் தரவுகள் கசிவு பாரிய சர்ச்சையை ஏற்படுத்தியது.ஆகவே தரவு கட்டமைப்பு தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

மருத்துவ துறை பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள நிலையில் சமூகக் கட்டமைப்பில் பாலியல் ரீதியிலான நோய் தாக்கங்கள் தீவிரமடைந்துள்ளன.அண்மைய கணக்கெடுப்புக்கு அமைய நாட்டில் 6000 பேர் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

மொத்த சனத்தொகையில் 3000 பேரில் ஒருவர் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ளார். இதனை அலட்சியப்படுத்த முடியாது. பாலியல் நோய் தொடர்பில் விழிப்புணர்வு நடவடிக்கைகளை விரிவுபடுத்த வேண்டும். அத்துடன் பாலியல் நோய் கட்டுப்பாடு குறித்து விசேட நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். – என்றார்.(05)

## உடுவில் மகளிர் கல்லூரி தேசியத்தில் சாதித்தது



200 ஆவது ஆண்டில் தடம்பதிக்கும் உடுவில் மகளிர் கல்லூரி தனது சாதனைப் பயணத்தில் நீண்டகாலத்தின் பின் அகில இலங்கை தேசிய மட்டப்போட்டியில் தனி நடனத்தில் அபிசனா



கோபிநாத் முதலிடம், பல்லிய குழுப்போட்டியில் முதலாமிடம், தனிவயலின் போட்டியில் கேதுசா யுவராஜ், அபிசனா கோபிநாத் ஆகியோர் முதலாமிடம் தனிப்பாடல் போட்டியில் நிசாயினி செல்வநாயகம் முதலாமிடத்தைப்பெற்று உடுவில் மகளிர் கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளனர். (05)

## நுண் கடன் திட்டங்களால் பாலியல் லஞ்சம் அதிகரிப்பு

### சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டு

கிராமப்புறங்களில் பெண்களை வீட்டுத் தலைவியாகக் கொண்ட பெரும்பாலான குடும்பங்கள் முறைசாரா நுண்நிதி கடன் நிறுவனங்களிடம் சிக்குண்டுள்ளன.

இந்தக் கடனை அடைக்க முடியாத போது பாலியல் இலஞ்சம் பெறும் நிலைக்கு ஆளாகுவதாக ஆய்வுகளின் மூலம் தெரிய வருகிறது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நிலையியற்கட்டளை 27 இன் 2 கீழ் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

ஆய்வுகளின் பிரகாரம் கிராமப்புற மக்களில் பெண்களை வீட்டுத் தலைவியாகக் கொண்ட பெரும்பாலான குடும்பங்கள் முறைசாரா நுண்நிதி கடன்களுடன் தொடர்புடைய கடன் சுமை காரணமாகக் காதணி களைக் கூட அடகு வைத்து வருகின்றனர்.

நாட்டில் தற்போது 11,000 நுண்கடன் வழங்கும் நிறுவனங்கள் சட்டவிரோதமாக இயங்கி வருகின்றன. கிராமங்களில் 'படுக்கைக் கடன்' என்று அழைக்கப்படும் இந்தக் கடனை அடைக்க முடியாத போது, பாலியல் இலஞ்சம் பெறும் நிலை காணப் படுகிறது.

மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் தெரிவித்துள்ளதன் பிரகாரம்,கடந்த மாதம் 15 வயதுக்குட்பட்ட 169 சிறுவர்கள் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகியுள்ளதோடு,அதில் 26 சிறுவர்கள் கர்ப்பமடைந்துள்ளனர்.

அத்துடன் சிறுவர்கள் மற்றும் பெண்களுக்கான பாலியல் சுரண்டல் மற்றும் துஷ்பிரயோகங்கள் தடுப்பு பணியகத்தின் அறிக்கையின் படி, கடந்த 9 மாதங்களில் 12 சிறுவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

மேலும் 1086 பாலியல் வன்கொடுமைகள், கடுமையான பாலியல் துஷ்பிர யோக வழக்குகள் 425 பதிவாகியுள்ளன. இந்நிலையில் இருந்து சிறுவர் தலை முறையைப் பாதுகாக்க வேண்டும். அதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்.

அத்துடன் இதுவரை 2000 தொழிற் சாலைகள் மூடப்பட்டு கடந்த ஆண்டு 533858 பேர் வேலை இழந்துள்ளனர். 20 சதவீத ஆடைத் தொழிற்சாலைகள் மூன்று மாதங்களுக்குள் மூடப்பட்டுள்ளன. இதில் 10 நிறுவனங்கள் நஷ்டஈடு வழங்கி ஊழியர்களை பணி நீக்கம் செய்துள்ளன. இதனால் அவர்களது குடும்ப நலன் நடவடிக்கைகள் கூட முடங்கியுள்ளன. வேலையிழந்ததால் பெண்கள் வேறுவழிகளில் பணத்தைத் தேடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

மேலும் பொருளாதார நெருக்கடியை படிப்படியாகத் தீர்க்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக கூறினாலும்,சாதாரண மக்களைப் பார்க்கும் போது அவர்களின் பரிதாப நிலை குறையவில்லை. பொருளாதார நெருக்கடியால் பெண்கள் மற்றும் சிறுவர்களே நேரடியாகப் பாதிக்கப் பட்டுள்ளனர்.



2023 மே மாதத்திற்குள் 39 லட்சம் பேர் மிதமான உணவுப் பாதுகாப்பின்றிய நிலைக்கு ஆளாகியுள்ளனர். 10,000 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் கடுமையான உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்கொள்வதாக யுனிசெப் நிறுவனம் தெரிவித்துள்ளது. திரிபோஷாவில் கூட அப்ளாடோக்சின் என்ற நச்சு இரசாயனம் உள்ளதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

அண்மையில் சுகாதார அமைச்சு,'தேசிய போஷாக்குக் கொள்கை 2021-2030' பத்தாண்டு கொள்கையை வெளியிட்டது. இதனை நடைமுறைப்படுத்த எடுக்கப் பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் அதன் முன்னேற்றம் என்ன எனக் கேட்கிறோம். ,2023 இல் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தால் வெளியிடப்பட்ட குறியீட்டின் பிரகாரம், இலங்கை 0.026ஏ தரப்படுத்தல் நிலையில் உள்ளது,10 பேரில் 6 பேர் பன்முக ஆபத்தில் உள்ளனர். இது மொத்த சனத்தொகையில் 55.7 வீதமாகும். – என்றார். (05)

## பொதுக் கூட்டம்

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்க பொதுச்சபைக் கூட்டம் நாளை (ஞாயிற்றுக்கிழமை) பிற்பகல் 4 மணிக்கு வைத்தியசாலையின் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவின் கேட்போர் கூடத்தில் நடைபெற உள்ளது. (05)

## குருணாகல் வீட்டில் வெடிப்புச் சம்பவம்

### மூவர் கைது

குருணாகல் – ரிதிகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நிக்கப்பிட்டிய பகுதியில் வியாழக்கிழமை வீடொன்றில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று சந்தேக நபர்கள் ரிதிகம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டடவர்கள் பசுவத்த , குருமட மற்றும் நிக்கப்பிட்டிய பிரதேசத்தை சேர்ந்த 36,47 மற்றும் 72 வயதுடையவர்கள் ஆவர்.

குறித்த வெடிப்பில் எந்தவித உயிர் சேதமும் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த வெடிப்பு இடம்பெற்ற வீடு மிகவும் பழைமைவாய்ந்தது எனவும் அங்கு வயோதிபர் ஒருவர் வசித்து வந்தார் எனவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

விசாரணையில் வெடிப்பு சம்பவம் இடம்பெற்ற வீட்டில் சில வெடி பொருள்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்டவர்கள் ரம்படகல நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து 48 மணிநேரம் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.12.2023இல் வெளியிடப்பெற்றது.